விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 02 சனிக்கிழமை (18.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

## ஈழத்தை இலங்கையில் உருவாக்கமுடியாது!

### அது கனவே என்கிறார் மேதானந்த தேரர்



உலகத்தில் எந்த இடத்தில் ஈழம் தொடர்பாக மாநாடுகளை நடத்தினாலும் இலங்கையில் ஈழம் என்றொரு நாட்டை உருவாக்குவது என்பது வெறும் கனவில் மாத்திரமே முடியும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் இருந்து கொண்டு நாட்டுக்கு துரோகம் இழைக்கும் தேசத் துரோகிகளை நாட்டில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

செல்வநாயகத்தின் 50க்கு 50 என்ற கோரிக்கை பிரபாகரனின் பயங்கரவாதம் வரை வளர்ச்சியடைந்தது. இதனால் இலங்கை மக்கள் மாத்திரமல்லாது வெளிநாட்டு மக்களும் பாதிப்புகளை அனுபவித்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகனை நேரில் சந்திக்கும் மகிந்தவின் திட்டம் ஏமாற்றத்தில்

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் நியூயோர்க் செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச போட்டிருந்த திட்டம் தோல்வியில் முடிந்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பூகோள கால மீளாய்வின்போது இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இதன்போது இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இந்த மீளாய்வுக்கு இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பொறுப்பாக நியமித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்த 3 நாடுகளும் ஆதரித்திருந்தன என்பது இலங்கைக்கு கலக்கத்தை (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கு அரசியல் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை

## அமைச்சர் திஸ்ஸ விதாரண கவலை வெளியீடு



(கண்டி), முப்பது வருட கால யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்னமும் கிடைக்காமை கவலைக்குரிய விடயம் என சிரேஷ்ட அமைச்சரும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு வட-கிழக்குப் பெண்கள் சம்பந்தமாக தயாரித்த அறிக்கையொன்றை கண்டி எர்ல்ஸ் ரிஜென்சி ஹோட்டலில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரணவிடம் கையளித்தது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக இலங்கைப் பெண்களுக்கான நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் அவரின் உரை அமைந்திருந்தது. அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இலங்கை அரசு தமிழர்களுக்கான தீர்வை பல்வேறு வழிகளில் வழங்குவதற்குத்தான் முயற்சித்து வருகிறது என்றும் ஒரு சில காரணங்களால் அந்த முயற்சி வெற்றியளிக்காமல் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது கவலைக்குரிய விடயமே என்றார்.

மேலும் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு விடயத்தில் அரசு வேகம் காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் சில விடயங்களை அமுல்படுத்துவதில் நாம் சில (19ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் குடும்பஸ்தர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த ஒருவர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் (02ஆம் பக்கம் பார்க்க)

## முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்றாம் (19ஆம் பக்கம் பார்க்க)


## அரசுக்கு எதிராக புரட்சி வெடிக்கும்-ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆட்சியிலுள்ள அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்றால் அரசுக்கு எதிராக புரட்சியை ஏற்படுத்தபோவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார (19ஆம் பக்கம் பார்க்க)

## புத்தரின் புனித எலும்புகளை இலங்கையிடம் ஒப்படைப்பதா?

### வைகோ எதிர்ப்பு



(சென்னை), இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியா வந்திருந்தபோது புத்தரின் சமாதியில் உள்ள புத்த பகவானின் சிதைந்த எலும்புகளை எங்கள் நாட்டுக்கு வழங்கவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்று புத்தரின் எலும்புகளை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

ஆனால் மத்திய அரசின் முடிவுக்கு ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் தோன்றிய புத்த மதம் சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் தேசிய மதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், மியன்மார் நாடுகளிலும் புத்த மதம் பரவியுள்ளது.

புத்தரின் மரணத்திற்கு பின் புத்தரின் உடல் கபிலவஸ்து (தற்போதைய பீகார் மாநிலம்) என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த இடத்தை புத்த மதத்தினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தலைமையில் வவுனியாவில் கூட்டம்



(வவுனியா)

ஜனாதிபதியின் வருகையுடன் இடம்பெற்ற வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் பற்றியோ, மக்களுடைய பிரச்சினைகள் பற்றியோ எடுத்துரைக்க ஆளில்லாத நிலையில் அதிகாரிகளின் அபிவிருத்தி பேச்சுக்களுடன் கூட்டம் நிறைவடைந்துள்ளது. வவுனியா, மன்னார் (19ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

SAFARI



72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100



100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80



80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP



4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம் சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொழும்பு பொதுநலவாய சங்கத்தில் மாகாண சபைகளுக்கு உறுப்புரிமை!

## அரசாங்கம் திட்டமிடுகிறது - சமல் ராஜபக்ஷ

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டின் போது மாகாண சபைகளுக்கு இச்சங்கத்தின் உறுப்புரிமை பெறுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செப்டெம்பர் 7ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இம்மாநாடு நடைபெறவுள்ளது. 54 நாடுகள் மற்றும் 179 மாநில அரசாங்கங்களைச் சேர்ந்த 600 பேர் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார். மேலும் 100 பேர் பார்வையாளர்களாக பங்குபற்றவுள்ளனர்.

இம்மாநாட்டின் போது இந்நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் செல்வதற்கான வாய்ப்பைப் பெறுவர். வடக்கு கிழக்குக்கும் கூட செல்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என செய்தியாளர் மாநாட்டில் சபாநாயகர் கூறினார்.

இம்மாநாட்டின் ஏற்பட்டுக் குழுத் தலைவரான பிரதி சபாநாயகர் சந்திமா வீரக்கொடி கருத்துத் தெரிவிக்கையில், இச்சங்கத்தில் மாகாண சபைகளுக்கு அங்கத்துவம் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை முயற்சிக்கும் எனக் கூறினார்.

மாநாட்டின் போது இது தொடர்பான தீர்மானத்தை நாம் முன்வைப்போம். இப்பிரேரணை ஒவ்வொரு மாகாணசபையிலும் அங்கீகரிக்கப்படவேண்டும் என அவர் கூறினார். இத்தகைய அங்கத்துவத்தின் பலன்கள் குறித்துக் கேட்டபோது, உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல்வகையான ஜனநாயக முறைமைகளை தெரிந்து கொள்வதற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் எனத் தெரிவித்தார். (ந-11)

# மருத்துவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

மருத்துவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற் படக்கூடிய அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு பொலிஸார் உறுதியளித்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற அர சாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை மருத்துவர் லலித் அபய ரணசிங்கவின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது. பொலிஸ் அத்தியட்ச கர் ஒருவர் தலைமையிலான குழுவினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். முன்னர் தெகிவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-11)

'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (227)
புதிய வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711

# நல்லூர் சூழலில் இரு பெண்கள் கைது

யாழ். நல்லூர் ஆலயச் சூழலில் வெளிநாட்டவர்களிடம் திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய உப பரிசோதகர் எஸ். குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரு பெண்களும் ஆலயச் சூழலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகவும் இவர்களைப் பரிசோதனைக்காக பொலிஸார் அழைத்த போது தப்பியோட முயற்சித்ததாகவும் யாழ் பொலிஸ் நிலைய உபபரிசோதகர் எஸ். குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கைப்பைகளில் இருந்து வெளிநாட்டுபணம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த இரு பெண்களும் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (ந-11)

56ஆவது பிறந்த நாளும் 23ஆவது மாத நினைவஞ்சலியும்

தோற்றம் -18.08.1956
மறைவு -19.09.2010

அமரர் சந்திரசேகரம் பவானிதேவி



அன்பெனும் சொல்லிற்கே
அடையாளமாகி நின்றீர்
அரவணைத்து எமையெல்லாம்
அன்புமழை பொழிந்து நின்றீர்
உண்மை அன்பின் உருவமாய்
இமயமாய் உயர்ந்து நின்றீர்
வாழ்வில் நாம் உயர்வடைய
கலங்கரை விளக்கானீர்
தனிமையில் எமை விட்டு
எங்கேதான் சென்றீர் நீர்?

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

# கைக்குண்டு தாக்குதலை கண்டித்து வைத்தியர்கள் நேற்று பகிஷ்கரிப்பு

## யாழ் மருத்துவர்களும் பங்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தெஹிவளை பிரதேசத்திலுள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் வலந்த ரணசிங்கவின் வீட்டின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கைக்குண்டு தாக்குதலை கண்டித்து நேற்று நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் உட்பட வடக்கிலுள்ள சகல மருத்துவர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அரச மருத்துவர் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க நாடு தழுவிய ரீதியில் நேற்று இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

வைத்தியர்களின் போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

# யாழ் பல்கலை மாணவர்களுக்கு....

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த, அனைத்துவருட மாணவர்களுடனான பொதுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

பணிப்புறக்கணிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாகவும், மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த அனைத்து வருட மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ந-8)

# லலித், குகனை நாம் கைது செய்யவில்லை - இராணுவம்

(கொழும்பு)

முன்னணி சோசலிசக் கட்சியின் உறுப்பினர்களான லலித்குமார் மற்றும் குகன் ஆகியோரை இராணுவம் கைது செய்யவில்லை என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் லலித் மற்றும் குகன் ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

லலித் மற்றும் குகன் ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாகவும், வடக்கு இராணுவ முகாம் ஒன்றில் தற்போது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்அண்மையில் முன்னணி சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

இதுதொடர்பில் உயர் இராணுவ அதிகாரிகள் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்திருந்தார்.

லலித் மற்றும் குகனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவின் போது கூட இவர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

லலித் மற்றும் குகன் ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்யவில்லை எனவும், முகாமில் தடுத்து வைக்கப்படவில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ந-11)

பாரிய மரம் விற்பனை

யாழ். பலாலி வீதியில் 20m உயரமும் 3 1/2m சுற்றளவும் உடைய இரு பாரிய இலுப்பை மரங்கள் உடன் விற்பனைக்கு உள்ளன. (216)

தொடர்புக்கு:- 0212241885

முச்சக்கர வண்டி சாரதி தேவை (Auto Driver)

விற்பனை நிறுவனமொன்றின் பொருட்களை எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்குரிய முச்சக்கர வண்டி (Trailer) ஓட்டுநர் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உடையோர் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் போன்ற விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம். மாதாந்த சம்பளமும் கமிசனும் உண்டு. (231)

SOND
இல. 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
கைபேசி இலக்கம் : 0772242394

ஆட்கள் தேவை

1. காசாளர் (ஆண்கள் இருவர், முன் அனுபவம் விரும்பத்தக்கது)
2. விற்பனையாளர்கள் (ஆண், பெண் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
நல்லி சில்க்ஸ்
121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5573 (க-775)

## குடும்பஸ்தர்...

ப.கிரிதரன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த சம்பவத்தின்போது அவரது வீட்டிற்குள் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் இவரை பெயர் கூறி வீட்டிற்கு வெளியே வருமாறு அழைத்துள்ளனர்.

இதன்போது அவர் வெளியே வந்ததும் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து அங்கு வந்த உறவினர்கள் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் இந்தத் தாக்குதல் சம்பவம் எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து எந்தத் தகவலும் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## ஈழத்தை இலங்...

பயங்கரவாதம் காரணமாக நாட்டின் ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. தேசிய உரிமைகள் அழிந்தன. இந்த பின்னணியில், நாட்டின் அதிர்ஷ்டமாக ஜனாதிபதி தலைமையில், பாதுகாப்பு செயலாளர் உட்பட்டோர் கொண்டு பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

எனினும் உயிரிழந்த பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிரூட்ட நினைக்கும் தேசத் துரோகிகள் நாட்டில் உள்ளனர்.

தென் இந்தியாவில் உள்ள இனவாதிகள் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தலைவலியாக தற்போது மாறியுள்ளதை காணமுடிகிறது என தேரர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தினால் சைவப்புலவர் றஜீபன் எழுதிய "பெரிய புராண சூசனத்தில் சைவ சித்தாந்தம்" நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பலர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாழத் தெரியாதவர்கள்

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான். அவனுக்கு பணம் மீது அதிக பற்று. அவனுக்குச் சம்பாதிக்கத் தெரியுமே தவிர செலவு செய்யத் தெரியாது.

மகா கஞ்சன். அடுத்தவர்களுக்கு கொடுப்பதென்றால் அவனுக்கு இயலாத விடயம்.

பணத்தைக் கையிலே எடுக்கவேமாட்டான். எடுத்தால் செலவு செய்ய வேண்டி வருமோ... அதனாலே... இப்படியே அவன் தனது காலத்தை ஓட்டினான்.

அவனுக்கு வயதாகிவிட்டது. ஒருநாள் அவனுடைய மனைவி கேட்டாள்; "இவ்வளவு நாளாக நீங்கள் என்னை எங்கேயுமே அழைத்துச்சென்றதில்லை... இப்போதாவது அழைத்துக் கொண்டு போகக்கூடாதா?" என்றாள்.

"எங்கே போக வேண்டும்– சொல்லுங்கள்" என்றான்.

"காசிக்குப் போகவேண்டும்... கங்கையிலே குளிக்க வேண்டும்" இப்படியாக அடுக்கிக் கொண்டு போனாள். இவன் பார்த்தான் "இதற்கெல்லாம் ஏன் இவ்வளவு தூரம் செலவு செய்து போக வேண்டும். நமது ஊரிலுள்ள ஆற்றிலேயே குளிக்கலாமே... இதுவும் புண்ணிய நதிதான். இங்கே குளித்தால் அங்கே குளித்த பலன் கிடைக்கும்" என்றான்.

சரியென்று இரண்டு பேரும் ஆற்றங்கரைக்குப் போனார்கள். அன்றைய தினம் ஏதோ விசேடம்...நிறையப் பேர் நீராடிக் கொண்டிருந்தார்கள். கரையிலே சில புரோகிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். நீராடுவதற்கு முன்பு அவர் முன் உட்கார்ந்தால், ஏதோ மந்திரம் சொல்லுவார்கள்... சிறிதளவு பணம் கொடுக்க வேண்டி வரும்.

அதனால் இவன் ஆற்றங்கரையிலே இருந்து சற்றுத் தூரம் போனான். ஊரை விட்டு தள்ளி வந்து விட்டான். அங்கே யாருமே இல்லை. அப்பாடா என்று சந்தோசப்பட்டான்.

குளிப்பதற்குத் தயாரானான். இந்த நேரம் கடவுள் பார்த்தார். இந்தக் கஞ்சனுக்கு ஏதாவது புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்து, ஒரு புரோகிதர் மாதிரி உருவத்தை மாற்றி, அந்த நபர் முன்னால் வந்து நின்றார்.

அவன் அதிர்ந்து போனான். இங்கே யாருமே இருக்கமாட்டார்கள் என்று நினைத்து நீராடுவதற்கு வந்தேன். இங்கேயும் ஒருவர் வந்து விட்டாரே... என்ன செய்வது என்று யோசித்தான்.

புரோகிதர் உருவத்திலே இருந்த கடவுள் சொன்னார்;

"இதோ பார்... இன்று விசேட நாள்... நீராடுவதற்கு முன்னர் சுயகல்பம் செய்வது நன்று" என்றார்.

"என்னிடமோ பணம் எதுவும் இல்லை..." என்றான்.

"பரவாயில்லை... பணத்தை பின் கொடுக்கலாம்... எவ்வளவு கொடுப்பீர்கள் என்பதை இப்போதே சொல்வது நல்லது" என்றார்.

"ஒரு பத்து ரூபா தருகிறேன்" என்றான்.

"சரி" யென்று ஒத்துக்கொண்டு அனைத்துக் கிரியைகளையும் செய்தார். அதன்பின் இருவரும் ஆற்றிலே இறங்கிக் குளித்தார்கள். அவர் சென்று விட்டார்.

நீண்ட நாட்கள் சென்றபின் அவன் இவர்களது வீட்டுக்கு கடனை வசூல் செய்வதற்காக வந்தான்.

வாசலில் நின்று கொண்டிருந்த அவன் மனைவியிடம் வந்த விடயம் தொடர்பாகக் கூறினான்.

அந்த அம்மா உடனே தனது கணவனிடம் செய்தியைக் கூறினாள்.

அவன் யோசனை செய்தான். இப்போது வெளியில் சென்றால் அவனது பத்து ரூபா பணம் கொடுக்க வேண்டி வரும். அதனால் எனக்கு "காய்ச்சல்" என்று அவரிடம் கூறும்படியாக மனைவியிடம் சொன்னான்.

அந்த அம்மாவும் இவனது செய்தியைப் போய் சொன்னாள்.

"அப்படியா... இப்போதே அவரை நான் உடனே பார்க்க வேண்டும்" என்று கூறினார்.

இந்த அம்மாவுக்கு அவர் கூறியதை உடனே தனது கணவரிடம் சொன்னாள்.

"இது ஏதுடா வம்பாகப் போய் விட்டது" என்று பார்த்தான். மனைவியை அருகில் அழைத்தான்.

"இதோ பார்... ஜன்னி வந்து நான் இறந்து விட்டதாகச் சொல்லி விடு" என்றான்.

புரோகிதர் பார்த்தார். "அப்படியென்றால் ஒரு வழியாக இருந்து அவருடைய இறுதிக் கிரிகைகளில் கலந்து விட்டு செல்கிறேன்" என்றான்.

உள்ளே இருந்தவன் யோசித்தான்; "அந்த ஆள் என்னை விட மாட்டான் போல இருக்கிறது. அதனால் என்னை ஒரு சவப்பெட்டியில் வைத்து தூக்கிக் கொண்டு மயானத்திற்கு கொண்டு செல்லுங்கள்" என்றான்.

அவன் கூடவே புரோகிதரும் நடந்து போனான்.

சுடலையில் இறக்கி... சடங்குகள் இடம்பெற்று தீ வைக்கும் நேரத்தில் பெட்டிக்குள் இருந்த நபர் அலறி அடித்தவாறு வெளிக் கிளம்பினார்.

புரோகிதர் உருவில் நின்ற கடவுள் சிரித்தார். தனது சுய உருவத்தைக் காட்டினார்.

அதன்பின் அவனை அழைத்து "இதோ பார்.. ஏன் இப்படியாக அல்லற்படுகிறாய்... ஏதாவது வரம் வேண்டுமென்றால் கேள் தருகிறேன்" என்றார்.

"பகவானே! ஒரேயொரு வரம் தான் கேட்க வேண்டும்" என்றான்.

"என்ன வேண்டும் கேள்" என்றான்.

"அந்தப் பத்து ரூபா பணத்தை தள்ளுபடி செய்தால் போதும்" என்று கூறினான்.

கடவுளும் அதற்கு "ஆம்" என்றார்.

செல்வந்தர்கள் பலபேர் இப்படித்தான் இருக்கிறார்கள்... தாங்களும் அனுபவிக்கமாட்டார்கள்; அடுத்தவர்களையும் நேசிக்கமாட்டார்கள். இது மாதிரியான கஞ்சர்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் Sri Lanka Computer Driving License (SLCDL) உடன் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான சான்றிதழையும் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு மானிப்பாய் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கே.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருப்பதுடன் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 தொடக்கம் 25 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (ICTT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும். (அ-9)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி–தரம் 2 (2012/2013) புதிய பிரிவு யாழ்.நிலையத்தில் எதிர்வரும் புரட்டாதி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை இலங்கை நூலகச் சங்கத்துக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி–தரம் 1 கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்களாவர்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ-9)

# மருத்துவ முகாம்

(சிவநகர்)

முதியோர் சங்கத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியர்களால் நடத்தப்படும் மாதாந்த நடமாடும் வைத்திய சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சிவநகர் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக சங்கச் செயலாளர் த.அன்னலக்சுமி அறிவித்துள்ளார். (அ-3-254)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 90 |
| தக்காளி | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 |
| கோவா | 60 | 70 |
| கரட் | 100 | 160 |
| பூசணி | 30 | 50 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 120 | -- |
| பயற்றங்காய் | 80 | 40 |
| லீக்ஸ் | 100 | 130 |
| பீற்றூட் | 40 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 80 |
| போஞ்சி | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 20-25 |

# இராசி பலன்

*18.08.2012*

*(ஆவணி 02, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*

*பிரதமை முன்னிரவு 9.23 மணிவரை*

*மகம் முன்னிரவு 8.46 மணிவரை*

*இராகுகாலம் 9.05-10.35 மணிவரை*

*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*

*நல்லைக்கந்தன் பூங்கா வனம்.*

**மேடம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**இடபம்** செய்தொழிலில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும்,சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** கூட்டு முயற்சிகள் வெற்றியளிக்கும், இழுபறியாக இருந்த காரியங்கள் கைகூடும், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**சிங்கம்** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பச் சுமை கூடும், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**கன்னி** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றும், விரயங்கள் கூடும், பெரியவர்கள் உதவியுண்டு, இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**துலாம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், தேவைகள் பூர்த்தியாகும், பொருளாதார நிலை உயர்வடையும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தேவைகள் பூர்த்தியாகும், அந்நியர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அரைகுறையாக இருந்த வேலைகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதங்கள் உருவாகும், பணக் குறைவுகள் ஏற்படும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், அபூர்வ சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு, உற்சாகமான நாள்.

**மீனம்** உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், பகைவர்கள் விலகுவர், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. தெற்கு பகுதி குடிநீர்த்திட்டம் சிறந்த முறையில் அமையவில்லை

## மக்கள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் வட்டு. தெற்கு கிராம சேவகர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் வழங்கும் திட்டமானது சிறந்த முறையில் அமையவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடிநீர் வழங்கும் இத்திட்டமானது வெளிப்புலம், அரசடி, பாலோடுபட்டி, கரையான்பிட்டி, கற்கழி இடங்களிலுள்ள வயலுக்கு செல்லும் பிரதான வீதியை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் தோண்டி எதுவித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாது கடந்த இரு மாதங்களாக கிடப்பில் விடப்பட்டுள்ளது.

மேற்படி இடங்களிலுள்ள விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களை இந்த வருட கால போக நெற்செய்கைக்கு தயார்படுத்தும் விதத்தில் குப்பைகளை ஏற்றி நிலத்தை பண்படுத்தும் இந்நேரத்தில் வயல்களுக்கு செல்லும் பிரதான வீதியால் போக்குவரத்து செய்யமுடியாதுள்ளது.

அத்துடன் மேற்படி குடிநீரானது கடற்கரையை அண்டியுள்ள தனியாருக்கு சொந்தமான வயல் கிணற்றிலிருந்து எடுக்கப்படுவதால் இது கோடை காலத்தில் இதன் போதுமான தன்மை, உவர் நீர்த்தன்மை போன்ற பாதகமான சூழ்நிலைகள் இருப்பதால் இதன்மூலம் பெறப்படும் குடிநீரானது நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்குமா? என்று அஞ்ச வேண்டியநிலை உள்ளது.

பல இலட்சங்களை செலவு செய்து வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இத்திட்டங்களை எமக்கு பயன்படும் விதத்தில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்து சிறந்த முறையில் இத்திட்டத்தினை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)




## செபி திட்டத்தின் கீழ் சுயதொழில்கடன்


(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓர் அங்கமான தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற வேலைவாய்ப்பற்றிருக்கும் 30 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு செபி திட்டத்தின் கீழ் சுயதொழில் கடன்கள் வழங்கப்படவுள் ளன.

அரச வங்கிகளூடாக தலா ஒவ்வொருவருக்கும் இரண்டரை இலட்சம் ரூபாய் குறைந்த வட்டியில் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் இவ்வாண்டுக்கான ஆரம்ப விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கே.கே. எஸ்.வீதி, கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பொது முகாமையாளர் வி.பி.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (அ-9)

## பசுவதை தடுப்பு தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகா சபையும் அம்பாறை மாவட்ட சிவதொண்டர் அமைப்பும் இணைந்து பசுவதையை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவான நேற்று முன்தினமும் தீர்த்தத் திருவிழாவான நேற்றும் இந்தத் துண்டுப் பிரசுரங்களை அடியவர்களிடம் விநியோகிக்கும் நடவடிக்கையில் அந்த அமைப்பினர் ஈடுபட்டிருந்தனர். *இந்து தர்மம் காப்போம் இந்துவாக வாழ்வோம்* என்னும் தொனிப்பொருளில் இந்தத் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. அந்தத் துண்டுப்பிரசுரத்தில் பசுவதைக்கு எதிரான கருத்துக்களும் பசுவினது மகத்துவமும் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-6)

## ஆலய கும்பாபிஷேகத்திற்கு 25 ஆயிரம் ரூபா நிதியுதவி

### அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

(பொன்னாலை)

பொன்னாலை சந்தி ஸ்ரீ கண்ண பெருமான் ஆலய கும்பாபிஷேகத்திற்காக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு கோவில் அறங்காவல் சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வருகை தந்திருந்த போதே இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கோவில் கும்பாபிஷேகம் நாளையதினம் நடைபெறவுள்ள நிலையில் கோவில் நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை அமைச்சர் அறங்காவல்சபைத் தலைவர் ஆனந்த சித்திரசேனனிடம் கையளித்துள்ளார்.கோயில் கட்டுமானத்திற்காக அமைச்சர் ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை

சமகாலத்தில் வட மாகாண ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்றிற்கு இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளைச் செயலாளர் இ.யோ.லெஸ்லி அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் கலந்து கொள்ளவுள்ள இக்கலந்துரையாடலில் வன்னியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறவுள்ள 104 ஆசிரியர்களின் புதிய பாடசாலைத் தெரிவு,இடமாற்றம் வழங்கப்படாதுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள், 2013 இல் 02 வருட ஒப்பந்த அடிப்படையிலான சேவையை நிறைவு செய்து வன்னியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்கள், தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணிப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை விசேட விடுமுறை கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள், கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப்படிகள் நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் முக்கியமாக ஆராயப்படவுள்ளமையாமல் இவ்வாசிரியர்கள் தமது விபரங்களை அன்றைய தினம் வழங்குவது அவசியமாகும்.கல்வி அமைச்சின் செயலாளருடன் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் , இசற்புள்ளி விவகாரம் , அதிபர்கள் , கல்வி அதிகாரிகளின் முறையற்ற நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பிலும் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-9)

## இளையோருக்கு தொழிற்பயிற்சி


(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தினால் கணனி, ஹாட்வெயர், தையல், அழகுக்கலை ஆகிய பயிற்சிகள் மன்றத்தின் பயிற்சி நிலையமான கைதடி நுணாவில் பகுதியில் அமைந்துள்ள அறவொளி கட்டடத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி நெறியில் 16 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் ,யுவதிகள் கலந்து பயன் பெறமுடியும்.

இப்பயிற்சியின் 6 மாத முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இப்பயிற்சியை முடித்து தொழிலை மேற்கொள்வதற்கும் வங்கியில் கடனை பெற்றுக் கொடுப்பதற்கும் தேசிய இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. (அ-3-37)



வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகம் என்பன இணைந்து நடத்திய கர்நாடக இசைப் பயிற்சி பட்டறை நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கர்நாடக இசைப்பயிற்சியை பிரபல பாடகர் ஸ்ரீ.பி.உன்னிகிருஷ்ணன் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-என்குமார்)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அந்திரான் கிராம அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அந்திரான் அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், ஜே/157 கிராமசேவகர் க.சிறீதரன், மீள் எழுச்சித் திட்ட சமூக வலுவூட்டலாளர் திருமதி லி.தயாளினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் புதிய நிர்வாகத் தெரிவு, டெங்கு சம்பந்தமான செயல், வீதி திருத்தம், தோற்பயிற்சி போன்றவை தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக செயலாளர் வ.நவநீதன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரியில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

21-III

மரக்கறிப்பயிர்களுள் பொதுவாக எவருமே விரும்புகின்ற பயிராக கத்தரி இருப்பதுடன் பலவிதமான கறிவகைகளை இதனை வைத்தே எங்களூர் இல்லத்தரசிகள் சமையல் செய்வதையும் நாமறிவோம். இன்னும் சிறப்பாக வயதுக்கு வந்த மகளிருக்கு கத்தரிக்காய் நிச்சயம் ஒரு உணவாக இருப்பது இரும்புச்சத்தினை வழங்கும் மரக்கறியாக இருப்பதனால் என்பார்கள்.

என்ன இருந்தாலும் பாட்டி சமைக்கும் கத்தரிக்காயே தனி.மட்டுவில் வெள்ளைக் கத்தரியும் தின்னவேலி ஊதாவும் எங்களூர் இனம் என்பதற்கு மேலாக இவற்றின் சுவையில் எங்களூர் மண்ணின் மணமிருக்கும். ஆனால் தற்போது பலவித நிறக் கலப்பில் கத்தரிக்காய் சந்தைக்கு வரத்தொடங்கிவிட்டது. நிறம் மட்டுமல்ல அளவிலும் உருவத்திலும் கூட பாரிய வேறுபாடுகளைக் கொண்டு கத்தரி உற்பத்தியாவது எங்களவரின் விருப்பத்தேவையை பூர்த்தி செய்வதுடன் பலவகை உணவுத் தயாரிப்பிற்கும் பொருத்தமாக இருக்கின்றது.



கத்தரியில் இவ்வளவு வகை வகையான உணவுகளைத் தயாரித்தபோதிலும் எம்மவருக்கு சலித்துப்போன உணவாக இருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. இருப்பினும் இன்னும் எங்களூர் இல்லத்தரசிகளை புதுமைகள் கலந்து புத்துணவு படைக்க உணவுப் பிரியர்கள் விரும்பியழைக்கின்றனர். சாதனையை இதிலும் படைக்க முடியும்.

கத்தரியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்தால் அதனது உற்பத்திக்கு அதுவொரு உந்துதலாக இருக்கும். மேலும் உற்பத்தியை பெருக்குதலும் அவ்வளவு எளிதல்ல. ஏற்கனவே கத்தரிக்கு பீடைநாசினிகளை தாறுமாறாக விசிறி பல பீடைகளை உருவாக்கி விட்டிருக்கின்றோம். இந்த விசித்திரத்தில் இன்றும் இன்னும் பலவற்றை தேடித்தேடி விசிறிக்கொண்டுமிருக்கின்றோம். மட்டுவில் வெள்ளையில் பீடைத்தாக்கம் பெரிதாக இருப்பதில்லை. இது ஓரளவிற்கு பீடைகளை தாங்கி வளரக்கூடிய இனம். இருப்பினும் எம்மவர்களுக்கு ஊதா இனத்திலேயே அதிக நாட்டமுண்டு. நிறமாக இருப்பதிலேயே அதிக பிரச்சினை இருக்கு மென்பார்கள். அது இதற்குச் சரியாகவே பொருந்துகின்றது.

கத்தரியில் தண்டு மற்றும் காய்துளைப்பானின் சேதம் ஊதா நிற கத்தரிக்காயிலேயே அதிகமாக இருக்கின்றது. இக்காய் துளைப்பானின் சேதம் அதிகமாக உள்ள பிரதேசங்களில் வெள்ளையினத்தை நடுகை செய்தல் உசிதமானது. இதனுடன் வெள்ளையினத்திற்கான கேள்வியை அதிகரிக்கவும் செய்தல் வேண்டும்.

பூச்சி பீடைகளின் விருப்பத்தேர்வாக குறிப்பிட்ட இனம் இருப்பது வழமையாயினும் இதற்காக நிறைய செலவு செய்து பீடை நாசினி பிரயோகஞ் செய்து கத்தரி பயிர்களைப் பாதுகாக்கவேண்டிய முறைமையை மாற்றி இலகு பயிர் செய்தால் அதிக பலன் பெறலாம்.

கத்தரியில் காய்தண்டு துளைப்பானும் எபிலக்னா வண்டும் வெண் ஈ மற்றும் இலைத்தத்திகளின் தாக்கத்தை தவிர்த்துப் பார்த்தால் இதில் வருகின்ற நோய்களே மறுபக்கத்தில் சேதம் விளைவிப்பவனாக இருக்கின்றன. அதிலும் அடியழுகல் நோய் மிக முக்கியமானது.

அடியழுகலை Color rot என அழைப்பார்கள். இதனை றைசக்ரோனியா (Rhizoctonia sdani) எனும் பூஞ்சணம் உருவாக்குகின்றது. கத்தரிப்பயிர் வளரும் போது வீரியமில்லாதிருந்தால் அல்லது அதனது வேர்ப் பகுதியில் சுவாத்தியக்குறைபாடு இருந்தால் வேர்ப்பகுதியை மண்ணில் வாழும் இப்பூஞ்சணம் முதலில் தாக்கும். மண்ணினது தன்மை காற்றுச்சுவாசத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்காதுவிடில் நிலத்தில் காற்றின்றிய சுவாசமே மேலோங்கியிருக்கும். இதனால் கத்தரியின் வேர்ப்பகுதியை சுற்றியுள்ள காற்று சுவாசத்தில் ஈடுபடும். நல்ல நுண்ணங்கிகளின் எண்ணிக்கை குறைவடைய வேர்ப்பகுதியை சூழ்ந்திருந்த வலிமையான பாதுகாப்பரண் நலிவடைந்துவிடும். இந்நிலையில் மண்ணில் காணப்படும் றைசக்ரோனியா எனும் பூஞ்சண வித்தி முளைத்து நலிவான நுண்ணங்கி காப்பரணினுடாக கத்தரியின் வேரில் தொற்று ஏற்படுத்திவிடும். காற்றின்றிய சுவாசம் அதிகரிக்க வேரிலுள்ள வேர் மயிர்களினளவு குறைந்து இறுதியில் அவை அழுகிக் காணப்படும். வேர் மயிர்கள் அழுகிவிட அகத்துறிஞ்சல் முழுமையாக தடைப்பட்டு விடும். இதனால் கத்தரி வாடத் தொடங்கும். மழை அதிகமாக பெய்து நிலம் தொடர்ச்சியாக அதிகளவு ஈரத்துடன் இருந்தால் இந்தநிலை ஏற்படும். இதற்கு முழுக்காரணமாக மண்ணிலுள்ள நுண்துளைகளுள் நீர் புகுந்து அதனுள் இருக்கும் காற்றினை வெளித்தள்ளிவிடுவதுதான். வேருக்குத் தேவையான காற்று மண்ணினுள் கிடைக்காத போது வேர்மயிர்கள் அழுகிவிடும். நிலத்தில் நீர் இருந்தும் கத்தரிவாடுவது இதற்காகத்தான்.

நிலத்தினுள் நன்றாக உக்காத கூட்டெருவை இடுவதும் நிலத்தினுள் அதிகளவில் சேதனப்பொருள் உக்காதிருப்பதும் நீர்ப் பிடிப்பை அதிகரிக்க வழிசெய்யும். இந்த நிலைமையை மண்ணினுள் வரவிடாது கத்தரியைப் பயிர்செய்வது அவசியமாகும். தாழ்வான பகுதியாக இருந்தால் மேடையில் கத்தரியை பயிரிடுவது சிறந்தது. றைசெக்ரோனியா பூஞ்சணத்தை கட்டுப்படுத்த உயிருள்ள எதிர் பூஞ்சணமான ரைக்கோடேர்மா (Trichoderma) இனை பயன்படுத்தலாம். இதுவும் மண்ணில் வாழும் பூஞ்சணமாக இருப்பதனால் இதனை விருத்தி செய்து விதைமற்று நாற்று நேர்த்தி செய்து பயன்படுத்துவதன் மூலம் பூஞ்சண தொற்றுக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். இங்கே கப்ரான் மற்றும் திராம் ஆகிய பூஞ்சண கொல்லிகளின் பயன்பாடு பெரிதளவில் இருக்காது என்பதுடன் இவ்விரசாயனங்களின் பயன் அதிலும் வீரியம் இருக்கும் வரையிலே என்பதனையும் கவனத்தில் கொள்ளல் நல்லது.

---

## இலங்கைக்கு செல்கிறீர்களா? மிகவும் அவதானமாகவிருங்கள்

## தமது நாட்டு மக்களுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

(லண்டன்)

இலங்கைக்கு பயணம் செய்யும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு பிரித்தானியா மிகவும் அவதானமாக இருக்கும் படி புதிய பயண எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்தப் பயண எச்சரிக்கைக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் 2009 மே மாதம் முடிவுற்றாலும் இலங்கையில் தேசியவாதம் எழுச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக மேற்குலக எதிர்ப்பு- குறிப்பாக பிரித்தானிய எதிர்ப்பு வாதம் வலுவடைந்துள்ளது.

இது பிரித்தானியத் தூதரகம் மற்றும் ஏனைய இராஜதந்திர சுற்றுப்புறங்களில் எதிர்ப்பு வன்முறை போராட்டங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்தப் போராட்டங்கள் பொதுவான பிரித்தானிய சமூகத்தை நோக்கியதாக இருந்தாலும் நீங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தவிர்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் 2009 மேமாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டபோதும் இலங்கை அரசாங்கம் பரந்தளவிலான தீவிரவாத எதிர்ப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதுடன் சோதனைச் சாவடிகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளது.

அதிகளவிலான இராணுவத்தினர் நாடு முழுவதிலும் நிலை கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

---

## கொழும்பில் ஏழு ஏக்கர் காணி சுவீகரிப்புக்காக 500 குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலை

(கொழும்பு)

கொழும்பு நகர பகுதியில் சுமார் 500 குடும்பங்களை வெளியேற்றி வர்த்தக ரீதியில் நன்கு பயன்தரக்கூடிய ஏழு ஏக்கர் காணிகளை விசேட செயற்றிட்டமொன்றுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை சுவீகரிக்கவுள்ளது.

குறித்த காணிகளை சுவீகரிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை கடந்த மே 4 ஆம் திகதி ஜனாதிபதி ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள் (விசேட ஏற்பாடு சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஹுனுப்பிட்டி, வேகந்த மற்றும் கொம்பனி வீதி ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

இந்த காணிகளில் இருந்து வெளியேற்றப்படுபவர்களுக்காக நாம் ஒரு விசேட வீட்டு திட்டத்தை கொண்டு வருவோம் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அரசாங்கம் கொழும்பிலிருந்து சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களை வெளியேற்றியுள்ளது.

வெளியேற்றப்பட்ட பல குடும்பங்களுக்கான சட்ட நிவாரணத்தை தாம் நாடியதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். இதனால்தான் 450 குடும்பங்கள் தெமட்டகொடையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த காணிகளை சுவீகரிக்கும் திட்டம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என கொழும்பு மேயர் ஏ.ஜே. எம். முஸம்மில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குறித்த காணிகள் பொது மக்களுக்கு சொந்தமானவையாகும். இதனால் அவர்களின் சொந்த வதிவிடங்களை பறித்துக் கொள்வது சுலபமான காரியமல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்களின் துரோகம் பற்றி எந்த நாட்டிலும் கருத்து வெளியிடுவேன்

## விக்கிரமபாகு கருணாரட்ன சூளுரை



(கொழும்பு)

ஆட்சியாளர்களே இந்த நாட்டின் மெய்யான துரோகிகள் எனவும் நாட்டின் வளங்களை சர்வதேச சக்திகளுக்கு தாரை வார்க்கும் இந்த அரசாங்கமே நாட்டுக்கு துரோகம் இழைக்கின்றது எனவும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் டெசோ மாநாட்டிற்குச் சென்றதன் மூலம் இந்த நாட்டின் நன்மதிப்பிற்கு தாம் களங்கம் ஏற்படுத்தியதாக ஜனாதிபதி அண்மையில் குற்றம் சுமத்தினார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வோரே இந்த நாட்டின் மெய்யான துரோகிகள்.

நாட்டின் தமிழ்மக்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளதாக டெசோ மாநாட்டில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டேன்.

தமிழ் மக்கள் மட்டுமின்றி நாட்டின் சகல மக்களுமே சர்வாதிகார போக்கிலான இந்த ஆட்சிக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி தாம் ருஹுணு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுவதனைப் போன்று வடக்கு, கிழக்கு மக்கள் ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு ஈழம் என்ற சொல் பயன்படுத்தப்படுவதன் மூலம் நாடு பிளவடைந்து விடாது. தற்போதைய ஆட்சியாளர்கள் காரணமாகவே ஈழத்தமிழர்கள் பற்றி பேச வேண்டியேற்பட்டுள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்களின் துரோகச் செயல் பற்றி இந்தியா மட்டுமன்றி உலகின் எந்த நாட்டிலும் கருத்து வெளியிட அஞ்சப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வட்டு.பிரதேச வைத்தியசாலையில் 7 வருடங்களாக வைத்தியர்கள் இல்லை

அராலி மேற்கில் உள்ள வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு 7 வருடங்களாக இரவு நேர வைத்தியர் இன்மையால் சிரமங்களை எதிர்கொள்ளவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அராலி, வட்டுக்கோட்டை பிரதேசங்களை சேர்ந்த 5 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 3 ஆயிரம் குடும்பங்கள் இரவு நேரங்களில் ஏற்படும் வைத்திய தேவைகளை பெறமுடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி,உள் நோயாளர் தங்கும் விடுதி என்பன உள்ள போதும் இரவு நேர வைத்தியர், மருத்துவ தாதி ஆகியோர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இங்கு பரிசாரர்களே நோயாளர்களுக்கு மருந்தும் கொடுத்து தடுப்பூசிகளை ஏற்றுகின்றனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இப் பகுதியில் மகப்பேற்றுக்குரிய தாய்மார்கள் இரவு நேரத்தில் வைத்திசாலையில் அனுமதிக்க முடியாத நிலை காணப்படுவதுடன் நோயாளர் காவு வண்டியும் திருத்த வேலைக்கு சென்று திரும்ப வராத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக உரிய தரப்பினர் கவனத்திற்கொண்டு இரவு நேர வைத்தியர் ஒருவரையும் மருத்துவ தாதி ஒருவ்ரையும் நியமித்து தருமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-3-15)

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தாறாம் நாளாகிய இன்று சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சுதுமலை ஞானவைரவர் அறநெறிப்பாசாலை, தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் விசேட நிகழ்வாக மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ் கச்சேரியும் நடைபெறும்.

★★★★★★★★★

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தாறாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை மன்ற மாணவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பாட்டு திருமதி நாகம்மா மகாலிங்கத்தின் மாணவர்கள், வயலின் திருமதி அ.கிருஷ்ணாலினியின் மாணவர்கள், தாளவாத்திய அரங்கு க.கண்ணதாசனின் மாணவர்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். அத்துடன் திருமதி பாலினி கண்ணதாசனின் மாணவர்களின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்.

★★★★★★★★★

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தாறாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்த புராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் ஸ்ரீவள்ளி திருமணம் எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசுகான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தாறாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை தெய்வீக பேருரைகளும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கற்றதனால் ஆய பயன் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை தென்புலோலியூர் பரா ரமேஸ் ஆற்றுவார்.


★★★★★★★★★

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தாறாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் மாலை 7 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை ஆன்மீக அருளுரைகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் இந்துவே கந்தனை வந்தனை செய்திடுவாய்! எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரையை பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆற்றுவார். (அ-9)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பூங்காவனத் திருவிழா



## நல்லூரில் நல்லாட்சி புரியும் கந்தா

நல்லூரில் நல்லாட்சி புரியும் கந்தா
நாவலரை உன் அருகில் கொண்டு வந்தாய்
காவலனாய் எம்மையும் காத்தருள்வாய்
சேவலதைக் கொடியாகக் கொண்டவனே
கேவலமாய்ப் போய் விடுமா எம் நிலைமை
கேட்கிறதா எம் அழுகை உந்தனுக்கு
யாமிருக்கப் பயமேன் என்றவனே
நீயிருக்கும் நம்பிக்கையே நமது கதி

*வேல்நந்தன், புலோலியூர்.*

## மனமுருகி வேண்டுகிறோம்



முருகா மால் மருகா
பூங்காற்றின் புது விருட்சத்தில்
வேல் கொண்டு
வினை தீர்க்க ஓடி வா
ஓடிவரும் உந்தன் முகம்
உறுதுணையாய் என்றும்
உள்ளமதில் பதிய
மனமுருகி வேண்டுகிறேன்

*வே.வே.அகிலேஸ்வரன்,மருதங்கேணி.*

## "ஓர் கணம் நல்லைக்கந்தனை நினைத்திடில் துயர் மிகு வேதனை ஓடிடும்"

"வானுயர் ஆறுமுகன் கோபுரம்– நல்லையில்
நாம் காணிடில் எய்திடும் தெய்வ தரிசனம்
நாளும் ஒலித்திடும் ஓங்கார மணியோசை
நிதம் எம்மை அழைத்திடும் அவன் ஓசை
நாடிடும் எம் நினைவெல்லாம் ஓர் கணம்
நல்லை கந்தனை நினைத்திடில்
ஓடிடும் எம் துயர் மிகுவேதனை"

*பி.பாலசுப்பிரமணியம்*

## எங்கள் வினை தீர்க்க வா



நல்லூரிலே கோயில் கொண்ட
அலங்காரக் கந்தனே
ஏறுமயில் ஏறி வா
எங்கள் வினை தீர்க்க வா
யாரோடு நோவோம்
உமக்கே எடுத்துரைப்போம்
உன் பதம் நாடிவரும் பக்தர்கட்கு
அருள் கிடைப்பது நிதர்சனம்

*ம.நிரோஷனா, தென்கோவையூர்.*

## சூழலை மாசகற்றும் சூட்சுமம்

பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும் பூ மரங்கள்–தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூட்சுமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி

நல்லூரின் கந்தா உனை நாடி வந்தவர்க்கு
பொல்லாதன வெல்லாம் போகுமே–நில்லாது
துன்பங்கள் நீங்குஞ் சுகவாழ்வு கைகூடும்
இன்பங்கள் பொங்கும் இனிது

*அமரர்.சி.இராசரத்தினம், வேலணை.*

## வீட்டை நல்குவான் நல்லூர் விமலனே...



காட்டில் தினைக்காவல் கானவர் கன்னி
நாட்டில் யானைக்காவல் தேவ யானை
கூட்டும் இச்சைக் கிரியைக் கொடிகளாக
வீட்டை நல்குவான் நல்லூர் விமலனே

*சிவ.சண்முகவடிவேல்,ஏழாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்

## 17.08.2012 - 16.09.2012



## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சந்தோஷம் தந்திடும் சனிப்பெயர்ச்சி!**

**திட்டமிடாது திடீர் திடீரென முடிவு எடுக்கும் மிதுன இராசி நேயர்களே!**

குழந்தை மனம் பெற்றவர்கள் நீங்கள். மனதில் சரி என்று தோன்றுவதை நீங்கள் உடனடியாகச் சொல்லி விடுவதால்தான், நண்பர்கள் திடீர் திடீரென எதிரிகளாக மாறுகின்றார்கள். பங்காளிபகை உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். படிப்படியாக முன்னேறி, பார் போற்றி வாழ வேண்டும் என்பவர்களுக்கு மத்தியில், திடீரென முன்னேறவேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்களும் நீங்கள் தான்!

உங்களுக்கு இந்த ஆவணி மாத கிரக நிலையை ஆராய்ந்து பார்க்கும் போது இராசிநாதன் புதன் தனஸ்தானத்திலும், விரயாதிபதி சுக்கிரன் இராசியிலும் சஞ்சரிப்பதால் செலவுக்கேற்ற வரவு வந்துகொண்டே இருக்கும். திடீர் திடீரென மாற்றங்களை காண்பீர்கள். சூரியபலம் நன்றாக இருப்பதாலும், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி 5 ஆம் இடத்திற்கு செல்வதாலும், இந்த மாதத்தில் இனிய சம்பவங்கள் ஏராளமாக நடக்கும்.

குறிப்பாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் ஆதாயம் கிடைக்கும். சுற்றுப் பயணத்தின் மூலம் சந்தித்த நண்பர் ஒருவரால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். மாதக் கடைசியில் சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு, உச்ச சனியின் ஆதிக்கம் உங்கள் உள்ளத்தில் இதுவரை நிறைவேறாத ஆசைகளை இப்பொழுது நிறைவேற்றி வைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். நட்சத்திரத்திற்கு உகந்த நாள் பார்த்து கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது இங்கிதமாகப்பேசி தங்கு தடைகள் அகல, வழி வகுத்துக்கொள்வீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்காக அறிகுறிகள் தோன்றும். குறிப்பாக உடன்பிறப்புகள் வழியில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். செப்டம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்துகொண்டே இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் வீட்டு முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பழைய பிரச்சினைகள் படிப்படியாக தீரும்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்!**

கடக இராசிக்கு ஆகஸ்ட் 31 ஆம் திகதி சுக்கிரன் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசியை பொறுத்தவரை 5, 12 க்கு அதிபதியான சுக்கிரன் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது குழந்தைகளின் தேவைகளை பூர்த்திசெய்யும் அமைப்பு உருவாகும். பிள்ளைகளின் கல்விக்கு வழிவகுத்துக் கொடுப்பீர்கள். கடல் தாண்டும் முயற்சிக்கும் வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொடுப்பீர்கள்.

கல்யாணத் தேவையை முன்னிட்டு தங்கம், வெள்ளி வாங்குவதிலும் எடுத்த முயற்சி பலன் தரும்.


**தடைகளை தகர்த்தெறியும் சனிப்பெயர்ச்சி!**

செப்ரம்பர் 12 ஆம் திகதி அர்த்தாஷ்டம சனியின் பிடியிலிருந்து உங்கள் இராசி விடுபடுகிறது. சனியின் 5 ஆம் இடத்து சஞ்சாரம் மிகுந்த நன்மைகளை வழங்கும். குறிப்பாக பூர்வபுண்ணிய வலிமையால் உங்களுக்கு என்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ, அவையெல்லாம் உங்களுக்கு கிடைக்கும். தொழில் முன்னேற்றம் குறித்து எடுத்த முயற்சிகள் வெற்றிபெறும். நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல அரசியல் பொறுப்புகள்கூட ஒரு சிலருக்கு வந்து சேரும். இந்தமாதம் விநாயகர் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும்.

எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றிகிடைக்கும் மாதமாகவே அமைகிறது. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உறவினர் பகை மாறும், புதிய முயற்சிகள் பலன் தரும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை கூடும். பிள்ளைகளின் நலன் கருதி ஒரு தொகையை செலவிட்டு மகிழ்வீர்கள். சனிப்பெயர்ச்சி உங்க ளுக்கு சாதகமாகவே இருக்கிறது. சனிக்கிழமை விரதமும், வழிபாடு களும் சங்கடங்களைத் தீர்க்கும்.

## பூர்வீகபுண்ணிய வலிமையால் என்னவெல்லாம் கிடைக்கவேண்டுமோ அவையெல்லாம் கிடைக்கும்

### ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்,**

**நான்காம் இடத்தில் சனி! நாளும் கவனம் தேவை இனி !**

**நினைத்ததை உடனடியாக முடித்துக் காட்ட நிறைய நண்பர்களைப் பெற்றிருக்கும் கடக இராசி நேயர்களே!**

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள். சொற்பொழிவு செய்வது முதல் சுற்றி இருப்பவர்களை ஈர்ப்பது வரை அனைத்து கலைகளையும் கற்று வைத்திருப்பீர்கள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. இருப்பினும் சில சமயங்களில் வாழ்க்கையின் மையப்பகுதியில் சில ஏமாற் றங்களை சந்திக்க நேரிடும். அதை பொருட்படுத்தாமல் ஒரு அனுபவ மாக எடுத்துக் கொள்வதில் வல்ல வர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்க நாளில் இராசிநாதன் சந்திரன் உங்கள் இராசிலேயே சஞ்சரிக்கிறார். அதோடு விரயாதிபதி புதனும் கூடியிருக்கிறார். அதேநேரத்தில் தனாதிபதி சூரியனும் சொந்த வீட்டில் உலா வருகிறார். எனவே, தேவைப்பட்ட நேரத்தில் தேவைப்பட்ட தொகை வந்து கொண்டே இருக்கும். எந்தக் காரியத்தை எப்பொழுது செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களோ, அந்தக் காரியத்தை அப்பொழுதே செய்ய போதுமான ஒத்துழைப்புகள் தானாகவே வந்து சேரும். பொருளாதாரமும் கைகொடுக்கும்.

இலாப மாலிகா யோகத்தோடு, உங்கள் இராசியின் அமைப்பு இம்மாதத்தில் இடம்பெற்றாலும், சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கமாகவும் இருப்பதால், சந்தோஷத்திற்கு மத்தியில் சங்கடங்களும் வந்து சேரும். எனவே, சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற நேரத்தில் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். தித்திக்கும் திசை நோக்கி தினசரி வாழ்க்கை செல்லும். அர்த்தாஷ்மச் சனியின் ஆதிக்கம் வருவதால் கூடுதல் கவனம் தேவை.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற பணவரவு வந்து கொண்டே இருக்கும்.

எந்தக் காரியத்தையும் தொடங்கி விட்டால், பணம் தானாகவே வந்து சேரும். திடீர் இடமாற்றம், வீடுமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். தெய்வீக காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். செம்பரம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் புதன் வழக்குகளில் வெற்றி கிடைக்க வழிவகுப்பார். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியிலேயே சுக்கிரன் சஞ்சரிப்பதால், சில திடீர் திருப்பங்களை காண்பீர்கள். நாடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொல்லை தந்த தொலைபேசி வழி தகவல் உங்களை விட்டு அகலும். பெற்றோர் வழியில் உள்ள ஆதரவு குறையலாம். இடம், பூமி விற்பனைக்கு எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் வருகிறது!**

செப்ரம்பர் 12 ஆம் திகதி நான்காம் இடத்தில் சனி சஞ்சரிக்கப்போகிறார். இது நன்மை தருமா என்று நீங்கள் நினைக்கலாம். அஷ்டமத்துச் சனியில் பாதியளவு இதற்கு வலிமை இருப்பதால் எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வதே நல்லது. சிந்தனைகளை செயலாக்குவதில் சில தடுமாற்றங்கள் ஏற்படும். வந்த விருந்தினர்களால் சில தொல்லைகள் உண்டு. வருமானத்தில் பாதிக்கு மேல் விரயம் ஏற்படலாம். இந்த நேரத்தில் சனீஸ்வர வழிபாடும், விரதங்களும் தக்க விதத்தில் உங்களுக்கு கை கொடுத்து உதவும்.

இம்மாதம் கணபதி வழிபாடு உங்கள் கனவுகளை நனவாக்கும். அனுமன் வழிபாடும் அல்லல்களைப் போக்கும்.

இம்மாதத் தொடக்கத்தில் வரவு அதிகரிக்கும். மாதத்தின் பிற்பகுதியில் செலவு நடைகள் கூடும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்துச் சென்றாலும், செல்லாவிட்டாலும், நிங்கள் அவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். கணவன்-மனைவிக்குள் விவாதங்கள் ஏற்படாமலிருக்க விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. ராகு-கேது பரிகாரம் நன்மையை வழங்கும். (தொடரும்)

## தேவைப்பட்ட நேரத்தில் தேவைப்பட்ட பணத்தொகை வந்துகொண்டேயிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் தமிழர் வதை முகாம்களை இழுத்து மூடுங்கள்

## ஜெயலலிதாவிடம் நாம்தமிழர் கட்சி கோரிக்கை

இலங்கையில் சிங்கள பெளத்த இனவாத அரசின் திட்டமிட்ட இன அழித்தலில் இருந்து தங்களை காத்துக்கொள்ள ஏதிலிகளாக தாய்த் தமிழ் மண்ணிற்கு வந்த நம் ஈழத்துச் சொந்தங்களை வதைக்கும் செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாம்களை மூடி அதில் தடுப்பிலிருக்கும் ஈழத் தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என நாம் தமிழர் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை செயிண்ட் ஜோர்ஜ் கோட்டையில் தேசக் கொடியேற்றி தமிழக முதல்வர் இலங்கையில் இன்னமும் முகாம்களில் அடைக்கப் பட்டுக்கிடக்கும் நம் சொந்தங்களான ஈழத் தமிழர்கள் அனைவரும் அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களும் அரசியல் சம உரிமை பெறுவதற்கு இனிமேலாவது இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஆனால், நம் ஈழத்தமிழ் சொந்தங்களின் நல்வாழ்வு, அரசியல் சம உரிமை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாக மத்திய அரசு கூறிக் கொண்டாலும் அது இலங்கை அரசின் நட்பைப் பேணுவதில்தான் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

அதனால்தான் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை அத்துமீறி தாக்குதல் நடத்துவது தொடர்கிறது.

இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல் சம உரிமைக்கும் மறு குடியமர்த்தலுக்கும் குரல் கொடுத்துள்ள தமிழக முதல்வர் இங்கு ஏதிலிகளாக வந்த நம் ஈழத் தமிழ் சொந்தங்களை தமிழக பொலிஸின் கியூ பிரிவு பல்வேறு வகைகளில் வதைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிவாரா?

இலங்கைக்கு குருதி கடத்த முயன்றார்கள், மண்ணெய் கடத்தினார்கள் என்ற ஐயத்தின் பேரிலும் 40 இற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் பல ஆண்டுகாலமாக சிறப்பு முகாம் என்ற பெயரில் உருவாக்கியுள்ள சித்திரவதைக் கூடங்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இந் நிலையில் தங்களை விடுவிக்கக் கோரி பூந்தமல்லி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள செந்தூரன் கடந்த 5 ஆம் திகதியில் இருந்து மீண்டும் பட்டினிப் போராட் டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான நம் சொந்தங்கள் சம உரிமை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக தமிழக சட்டப் பேரவையில் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றிய தமிழக முதல்வர் தமிழ் நாட்டிலேயே அவர்களை வதைக்கும் இந்த சிறப்பு முகாம்களின் மீது தனது கவனத்தை செலுத்த வேண்டுமாக நாம் தமிழர் கட்சி கேட்டுக்கொள்கிறது.

தங்களின் மீதான வழக்குகளில் அவர்களை பிணையில் விடுதலை பெற்றுவிட்ட பின்னரும் மனிதாபிமானமற்று, அடிப்படை உரிமைகள் மறுத்து அவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது நியாயம்தானா?

எனவேதான் மனிதாபிமான சட்டங்களுக்கு முரணான சிறப்பு முகாம்களை இழுத்து மூடிவிட்டு அதில் அடைக்கப்பட்டுள்ள நம் சொந்தங்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக முதல்வரிடம் நாம் தமிழர் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## காட்டுத்தீயை அணைக்க உலங்குவானூர்திகள்

பொலநறுவை மாவட்டத்திலுள்ள சோமாவதி சைத்திய பகுதியை சூழவுள்ள பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயை அணைப்பதற்கு தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு உதவுவதற்காக விமானப்படையின் பெல் 212 ரக உலங்கு வானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## காணிப்பிரச்சினை காரணமாக கட்டடங்கள் அமைப்பதில் சிக்கல்

### நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

(சிவநகர்)

உருத்திரபுரம் மருத்துவமனையை அபிவிருத்தி செய்வதற்கு பல நிறுவனங்கள் முன் வந்தும் மருத்துவமனையின் காணிப் பிரச்சினையால் அபிவிருத்தி செய்ய முடியாத அவல நிலை உள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த மருந்துவமனை அமைந்துள்ள காணியில் 200 கட்டில்கள் வைப்பதற்கேற்ற கட்டம் மற்றும் அநாதைகள் , விதவைகள் பராமரிப்பிற்கான கட்டடம், வைத்தியர்களுக்கான விடுதி என்பன அமைத்துக் கொடுப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனமும் சுவிஸ் நிறுவனமும் முயற்சி எடுத்தபோதும் காணி தொடர்பான பிரச்சினையால் அபிவிருத்தி செய்யமுடியாதுள்ளது.

இதனால் வைத்தியர் விடுதி அமைக்கப் படாமையினால் வைத்தியர்கள் இவ் வைத்தியசாலையில் கடமையை பொறுப்பேற்பதற்கு பின்னடிக்கின்றனர்.

அத்துடன் கட்டடங்கள் அமைக்கப்படாமையினால் நோயாளர்களும் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரியதரப்பினர் இம் மருத்துவமனைக்கான காணிப்பிரச்சினைகளை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து கட்டடத்தை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

## மூன்று இலங்கையர்களுக்கு இந்தியாவில் சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட மூன்று இலங்கையர்களுக்கு அந்த நாட்டின் நீதிமன்றமொன்று சிறைத்தண்டனை விதித்துள்ளதாக த ஹிந்து நாளிதழில் செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இதற்கமைய போதைப்பொருள் கடத்தல் குழுவின் முக்கியஸ்தர் என கருதப் படுபவருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு இலங்கை பிரஜைகளுக்கும் தலா 10 ஆண்டுகள் வீதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறைத்தண்டனை தவிர குறித்த மூவருக்கும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கைக்கு ஹெரோயின் போதைப்பொருளை கடத்த முயற்சித்ததாக தெரிவிக்கப்படும் குழுவின் முக்கியஸ்தருக்கு நான்கு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

ஏனைய இருவரும் தலா இரண்டு இலட்சம் ரூபா வீதம் அபராதம் செலுத்த வேண்டும் என இந்திய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் படுகாயம்

(மாஞ்சோலை)

இனம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரொருவர் படுகாயமடைந்து முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.55 மணியளவில் புளியடிச்சந்தி தண்ணீரூற்று முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த நபர் வீட்டில் இருந்தவேளை பெயரைச் சொல்லி அழைத்தபோது வெளியே சென்ற நபரை கைத்துப்பாக்கியால் சுட்டதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் கிரிதரன் (வயது43) என்ற 7 பிள்ளைகளின் தந்தையே கைத்துப்பாக்கிக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3)





வடமாகாண ஆளுநர் மற்றும் உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகம் என்பன இணைந்து இலங்கை இந்திய நட்புறவு அமைப்பின் அனுசரணையுடன் நடத்திய ஸ்ரீமதி அலர்மேல்வள்ளியின் பரத நாட்டிய பயிற்சிப் பட்டறை நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் அலர்மேல்வள்ளியின் பயிற்சிப் பட்டறை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் கணலாம். (படங்கள் :-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

13

## இலங்கையின் புகழ் பூத்த மன்னன் தேவநம்பியதீசன்

### தேவநம்பியதீசன் காலச் சிற்றரசுகள்


ஈழத்தின் வரலாற்றுக்காலம் தேவநம்பியதீசனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றன. அனுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு இம்மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒற்றையாட்சிமுறை வட கிழக்கு மகாணங்கள் உட்பட்ட ஈழம் முழுவதும் அனுராதபுரம் அரசனின் இறுதிக்காலம் வரை (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) நீடித்திருந்தது எனப் பாளி நூல்கள் தெரிவிக்கின்றன. கி.மு. 247 ஆம் ஆண்டு தொட்டு கி.மு. 207 வரை அனுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்த தேவநம்பிய தீசன் நாகதீவு உட்பட உத்தர தேசத்தைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டிருந்தான்.



அசோகச் சக்கரவர்த்தி-சிற்பம்

இம்மன்னின் காலத்தில் இலங்கையின் வடபெரும்பகுதி உத்தரதேசம் என்றும், தென்பெரும்பகுதி தக்கண தேசம் என்றும் வழங்கப்பட்டன. நாகதீவு என்ற பெயர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரியதாக ஆள்புலச் சுருக்கமடைந்திருந்தது. அவனுடைய காலத்தில் பல சிற்றரசர்கள் நாடளாவிய விதத்தில் காணப்பட்டதைப் பிராமிக் கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன. வட இலங்கையில் யாழ்ப்பாணப்பிரதேசத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் நாகக்குடியிருப்புகள் காணப்பட்டன. கல்யாணி (களனியா) உதிய என்பவனின் அரசாகவும், உருக்குணைப்பகுதியில் கஜராகமம், சண்டானகமம் ஆகிய பகுதிகள் சத்திரிய வம்சத்தினரின் சிற்றரசுகளாக விளங்கியுள்ளன. கஜரகமத்தை கதிர்காமம் என கெய்கரும், சண்டான கமத்தை கல்லோயாப்பகுதி எனச் சிற்றம்பலமும் இனங்காண்பர். கிழக்கிலங்கையில் சேருவில, சோம ஆகியவிடங்களில் முறையே சிவ, அபய என்போரால் ஆட்சி செய்யப்பட்ட இரண்டு சிற்றரசுகள் இருந்துள்ளன எனப் பிராமிக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் இலங்கையின் பெருமன்னனாகத் தேவநம்பியதீசன் விளங்கியுள்ளான்.


முத்துசிவனுக்குப் பின்னர் தீசன் அனுராதபுரத்தின் அரசனாக முடிதரித்துக் கொண்டபோது நல்ல நிமித்தங்கள் பல ஏற்பட்டன என மஹாவம்சம் விபரிக்கின்றது. பூமியினுள் புதையுண்டிருந்த பெறுமதி மிக்க தங்கமும் வைரமும் தாமாகவே நிலமட்டத்துக்கு வெளிப்பட்டன. திரவியங்கள் நிறைந்த கப்பல் ஒன்று உடைந்து கரை ஒதுங்கியது. அனுராதபுரத்துக்குத் தென்புறமாக இரண்டு ஜோஜனா தூரத்திலுள்ள சந்தாமலையில் தேர்த்துலாத் தடிப்பில் வெள்ளி, தங்கம், பலவர்ணப் பூக்கள் நிறத்திலான மூங்கில்கள் மூன்று தோன்றின. கயா, ஹாயா, ரதா, அமலகி, வைத்தக, கும்பக், வளைய, பரகதிக முதலான எட்டு வகை முத்துக்கள் சமுத்திரத்திலிருந்து கரை ஒதுங்கின. இவையனைத்தும் மன்னனான தீசனுக்கு வழங்கப்பட்டன. இவ்வளவு செல்வத்தையும் கண்ணுற்ற தீசன், இப்பெறுமதி மிக்க செல்வங்களைப் பெறத்தகுதியானவர் எனது நண்பர் தர்ம அசோகரே ஆவார். இவற்றை அவருக்கு என் பரிசில்களாக அனுப்பிவைப்பேன் என முடிவு செய்தான். இத்தனைக்கும் அசோகனும் தீசனும் ஒருவரையொருவர் நேரில் சந்தித்தவர்கள் அல்லர். எனினும் முகம் காணாமலேயே நட்புடையவர்களாக விளங்கினர்.



தேவநம்பியதீசன் -சிலை

### 3.2 அசோகனுக்கான தூதுக்குழு

மன்னன் தீசன் ஒரு தூதுக்குழுவை ஒழுங்கு செய்தான். அதில் அவனுடைய மருமகனும் மூத்த அமைச்சனுமான மகா அரித்தன், அரசனின் பிராமணப் புரோகிதன். இன்னொரு அமைச்சன், அரச தனாதிகாரி ஆகியோர் அடங்கியிருந்தனர். மூவகை இரத்தினங்கள், அரச தேருக்கான மூங்கில் துலாக்கள், வலம்புரிச்சங்கு, எட்டுவகை முத்துகள் ஆகியவற்றோடு இவர்கள் ஜம்புக்கோளத் துறைமுகத்தில் மரக்கலம் ஏறினர். பதினான்கு நாட்களின் பின்னர் பாடலிபுரத்தை அடைந்து அசோகனிடம் இப்பரிசில்களை வழங்கினர். இவற்றிற்கு நிகரான செல்வம் இல்லை என அசோகன் மகிழந்தான். தூதுவர்களுக்குப் பட்டங்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தான். பின்னர் தன் அமைச்சர்களோடு கலந்துபேசி, தீசனுக்குப் பரிசில்கள் அனுப்புவதென முடிவாகியது. அரசனாக அபிஷேகம் செய்து கொள்வதற்கான பொருட்களான, யாக் மயிர்களினால் செய்யப்பட்ட பீலி




அசோகச் சாம்ராச்சியம்



அசோகச்சக்கரம்



அசோகச் சக்கரவர்த்தி (சித்திரம்)

விசிறி, மகுடம், உடைவாள், தங்கப் பாதுகைகள், குடை, தலைப் பாகை, காதணிகள், சங்கிலிகள் குடங்கள், சந்தனக்கட்டைகள், உயர்ந்த பட்டாடைகள், விலையுயர்ந்த துவாய்கள், நாகர்களிடமிருந்து பெறப்பட்ட பல வகை ஆபரணங்கள், வாசனைத் தைலம், செம்மண், கங்கையில் பெறப்பட்ட புனித நீர், ஓர் அரச கன்னிப்பெண், பல்வகை தங்கப்பாத்திரங்கள், அரச அம்பாரி, அரிய மருந்துகள், பழவகைகள், 160 மூடை மலை அரிசி என்பவற்றைப்பரிசிலாக அனுப்பிவைத்தான். அவற்றோடு ஒரு செய்தியையும் அனுப்பினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிராகவே தற்போது நடவடிக்கை தேவை

## எதிர்க்கட்சி பிரதித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அல்லது வேறு எவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதனால் பிரபலமான நபர்களை கட்சி இழந்து விடும் என்பதால் கட்சிக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஹரிசன் மற்றும் சந்திராணி பண்டார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகள் குறித்தே சஜித் பிரேமதாச இவ்வாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அழிவை நோக்கி நாட்டை இட்டுச் செல்லும் அரசாங்கத்திற்கு எதிராகவே தற்போதைய நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜயசேகரவின் கருத்துக்களினால்தானே வேறு யாருமோ பாதிக்கப்படவில்லை. ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹரிசன் மற்றும் சந்திராணி பண்டார ஆகியோருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து தான் அறியவில்லை.

எனினும் தயாசிறி ஜயசேகர தெரிவித்த சில கருத்துக்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை திலக் மாரப்பன தலைமையிலான ஒழுக்காற்று குழுவுக்குத்தான் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. விசாரணைக்கு வருமாறு மேற்படி உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்படவில்லை என்றார். (அ-2)

# வன்முறை சம்பவங்களை விசாரிக்க ஐ.நாவின் உதவி பெறப்பட வேண்டும்

## 28 அ.சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இடம்பெற்று வரும் மோதல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் விசாரணை நடத்தப்பட வேண்டுமென 28 அரச சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கையை அரசாங்கம் மறுத்துள்ளது.

அண்மையில் வவுனியா சிறையில் இடம்பெற்ற மோதலில் சுயநினைவை இழந்த இரண்டாவது தமிழ் அரசியல் கைதியும் உயிரிழந்தார். இந்த மரணத்துக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைக் கைதிகள் கடுமையாக தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் இரண்டு கைதிகள் உயிரிழந்தனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மையை அறிய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை நாட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்வதானது நாட்டின் உள் விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பை நேரடியாக பங்கேற்கச் செய்வதற்கு நிகரானதாகும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாத சந்தேக நபர்களான நிமலரூபன் மற்றும் டெல்றொக்சன் ஆகியோரின் மரணம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஊடாக சர்வதேச விசாரணை நடத்த இந்த 28 அரச சார்பற்ற நிறுவனங்களும் முயற்சி மேற்கொண்டு வருவதாக திவயின பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# ஷவ்வால் மாத தலைப்பிறை பார்க்குமாறு வலியுறுத்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறையை இன்று சனிக்கிழமை மஃரிப் தொழுகை அடுத்து பார்க்கும் படி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிறைக்குழு செயலாளர் அஷ்-ஷைக் ஏ.எம்.ஏ.அஸீஸ் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பிறை மாதங்களை கணித்துக் கூறும் பாரிய பொறுப்பை அகில இலங்கை ஜம்இய்யத்துல்ல உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை, ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை வெற்று கண்களுக்கு தென்படும் பட்சத்தில் 011 5234044, 011 243 2110, 011 2390783 மற்றும் 077 7366 099 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக கொழும்பு பெரிய பள்ளிவாசலிலுள்ள மத்ரஸதுல் ஹமீதியா மண்டபத்தில் நடைபெறும் பிறை தீர்மானிக்கும் மாநாட்டிற்கு அறிவிக்கும் படி கோரப்பட்டுள்ளது. (அ-2)

# மழை பொழியச் செய்ய முடிந்தால் அதனையும் மக்களுக்காக செய்வேன்

## ஜனாதிபதி கூறுகிறார்

நாட்டில் மழையை பொழியச் செய்ய முடிந்தால் அதனையும் மக்களுக்காக செய்வேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கெபிதிகொல்லாவ பகுதியில் வைத்து ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். பெருந்தெருக்கள், வாவிகள் போன்ற அடிப்படை உட்கட்டுமான வசதிகளை செய்து கொடுக்க முடியும். எனினும் மழையை பெற்றுக் கொடுக்க என்னால் முடியாது.

மழையை பெய்யச் செய்ய நான் மந்திரவாதி அல்ல. அவ்வாறு மழை பொழியச் செய்ய முடிந்தால் அதனையும் மக்களுக்காக செய்வேன். மக்கள் நலனுக்காக செய்யப்படும் எந்தவொரு செயற்றிட்டமும் கைவிடப்படமாட்டாது.

மழை இல்லாத காலத்தில் நாடு முழுவதிலும் பௌத்த பிக்குகள் பிரித் ஓதியதனால் சில பகுதிகளுக்கு மழை கிடைத்துள்ளது என்றார்.

இதற்காக பௌத்த பிக்குகளை பாராட்டுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆரம்பக்கல்வி மாணவர்களின் வலய மட்ட போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட திருக்குறள் மனனம், விரைவு கணிதப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களின் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

**திருக்குறள் மனனம்**

**தரம் 1**

அ.யனுசியா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), அ.அர்ச்சயா (மு/அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்),வீ.கலைப்பிரியன் (மு/பாலிநகர் மகாவித்தியாலயம்)

**தரம் 2**

வி.மகிழினி (மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை), உ.மிதுசிகா (மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), கே.அபிநேகா (மு/கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலை)

**தரம் 3**

அ.தர்மிகா (மு/கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை), சி.குவேனி (மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை), க.யதுசிகா (மு/ஆறுமுகம் வித்தியாலயம்)

**தரம் 4**

பு.சுமதினி (மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை), செ.புவிராஜ் (மு/பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயம்), ம.நிலோஜன் (மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலை)

**தரம் 5**

வி.கோகிலா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை), கு.அபிநயா (மு/அனிஞ்சியன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்), கி.கிருஷிகா (மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலை)

**விரைவு கணிதம்**

**தரம் 2**

பெ.தனுசிகா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), பா.மதுசாளினி (மு/வவுனிக்குளம் மத்திய துலுசு அ.த.க. பாடசாலை), வி.தமிழ்நிலவன் (மு/ஆறுமுகம் வித்தி யாலயம்)

**தரம் 3**


வி.விதுர்ஷா (மு/ஆறுமுகம் வித்தியாலயம்), ச.தேனுஜா (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாயலம்), வி.திருபரங்கன் (மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்)


**தரம் 4**

நா.தனுராஜ் (மு/ஆறுமுகம் வித்தியாலயம்), ம.அனோஜன் (மு/அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயம்), சி.திலீபனா (மு/முத்தையன் கட்டு இடது கரை அ.த.க. பாடசாலை)

**தரம் 5**

கே.பவித்திரன் (மு/ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலை), கி.நர்மதா (மு/பாலிநகர் மகா வித்தியாலயம்), ஜே.டினோஜா (மு/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை). (அ-3-15)





**புங்குடுதீவு தபால்கத்தில் வியாபார மேம்படுத்தல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.**

**இந்நிகழ்வில் புங்குடுதீவு தபாலதிபர் திருமதி சுமித்திராதேவி தபோதரன் தேசிய கொடியேற்றுவதையும் அஞ்சலக கொடியை தட்டையான் புலம் உப தபால் அதிபர் திருமதி ச.நவரட்ணம் ஏற்றுவதையும் அஞ்சலக சேவை தொடர்பான துண்டுப்பிரசுரம் பஸ் ஒன்றில் வைத்து மக்களுக்கு விநியோகிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்துகிறது இலங்கை

(கொழும்பு)

13 இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை இலங்கை அரசு புதிதாக ஏற்படுத்தவுள்ளது

இலங்கை அமைச்சரவை இதற்கு அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கௌதமாலா, பெலிஸ், நிக்கராகுவா, பார்படோஸ், கிரெண்டா, சென்.கிட்ஸ் அண்ட் நெவிஸ், சென்.வின் சென்ட் அன் கிரெனடின்ஸ், சூரனாம், ஹொண்டுரோஸ், அன்டிகுவா அன் பர்புடா டொமினிக்கா, ஹெய்டி, சென்.லூசியா ஆகிய நாடுகளுடனேயே இலங்கை அரசாங்கம் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தவுள்ளது.

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 33 நாடுகள் ஐ.நாவில் அங்கம் வகிக்கின்றன.

இவற்றில் 20 நாடுகளுடன் இலங்கை அரசு இராஜதந்திர உறவுகளை வைத்துள்ளது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இராஜ தந்திர உறவுகளை விரிவாக்குவது இலங்கையின் வெளிவிவகார கொள்கையில் முன்நோக்கிய மற்றொரு அடி என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# நுரைச்சோலை ஒளிப்படத்தை நாணயத்தாளிலிருந்து நீக்க கோரிக்கை

2011 இல் அரசால் வெளியிடப்பட்ட நூறு ரூபா நாணயத்தாளில் சீன நிறுவனமான சீன இயந்திரம் மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம் வழங்கிய 455 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படமானது அச்சிடப்பட்டிருந்தது.

அந்த ஒளிப்படத்தை குறிப்பிட்ட நாணயத்தாளிலிருந்து அரசு நீக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நுரைச்சோலை மின்னாலையில் தொழில்நுட்ப பிரச்சினைகள் காணப்படுவதுடன் மின் உற்பத்தியில் சீரற்றதன்மை காணப்படுவதும் அடிக்கடி மின்வெட்டு நிகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

நாணயத்தாளில் காணப்படும் நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படமானது இலங்கையின் அபிவிருத்தி மற்றும் செழுமையைக் குறிக்கும் குறியீடாக காணப்படுவதாக பிரதான எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான கர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போது புழக்கத்திலுள்ள நூறு ரூபா நாணயத்தாளில் நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படம் அச்சிடப்பட்டுள்ளதானது தமக்கு கிடைத்துள்ள நிகரற்ற பெருமை என சீன இயந்திர மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளதாக சட்டவாளர் டீ சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-11)

# மீள்குடியேற்ற மக்களை அமைச்சர் சந்தித்தார்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்காக கைவேலி கணேசா வித்தியாலயத்தில் வைத்து பதிவுகள் மேற்கொள்ளப்படும் நிலையில் அம்மக்களை மீள்குடியேற்ற அமைச்சர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டுவரும் மக்கள் மழை காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

இம் மக்களை சந்தித்து மீள்குடியேற்ற அமைச்சர் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கியதுடன் வீட்டு உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வைத்தார்.

அத்துடன் காசோலையும் வழங்கியுள்ளார். இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்படும் குடும்பங்கள் மீள்குடியமர்ந்து வருகின்றனர். (அ-3-25)

# குடும்பத்தகராறு கொலையில் முடிந்தது-வத்தளையில் சம்பவம்

(வத்தளை)

வத்தளை ஹெந்தல கலஹதுவ டொனி மாவத்தையில் வசிக்கும் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவருடைய தந்தையும் சகோதரரும் இணைந்து தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார்.

அடிகாயங்களுக்கு உட்பட்ட நிலையில் ராகம வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான தந்தையும் சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




★ *1201-லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது.*

★ *1868-பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான்சென் சூரிய கிரகணத்தை ஆராயும்போது ஹீலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.*

★ *1877-செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் கண்டுபிடிக்கப்பட்டது.*

★ *1891-மார்டீனிக் தீவில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் 700 பேர் கொல்லப்பட்டனர்.*

★ *1917-கிறீசில் தெசலோனிக்கி என்னும் நகரில் இடம்பெற்ற தீவிபத்தில் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 70 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.*

★ *1924-பிரான்ஸ் ஜேர்மனியில் இருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித்தது.*

★ *1938-நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரியோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ் வெல்ட் திறந்து வைத்தார்.*

★ *1950-பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் • லாஹூட் படுகொலை செய்யப்பட்டார்.*

★ *1958-விளாடிமீர் நபபோவ் எழுதிய லொலிட்டா (Lolita) என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட் டது.*

★ *1971-வியட்நாம் போர்: அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தன.*

★ *1983-டெக்சாசைத் தாக்கிய அலீசியா என்ற சூறாவளியினால் 22 பேர் கொல்லப்பட்டனர்.*

## பிறப்பு

★ *1750-அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (இ.1825)*

## இறப்புக்கள்

★ *1227-செங்கிஸ் கான், மங்கோலியப் பேரரசின் மன்னன்.*

★ *1850-ஹோனர் தெ பல்ஸாக், பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1799)*

★ *1945- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் (பி.1897)*

★ *2009- கிம் மாய் ஜுங், தென்கொரியக் குடியரசுத் தலைவர் (பி.1924)*

## சுபாஷ் சந்திர போஸ்



நேதாஜி (தலைவர்) என்று இந்திய மக்களால் மரியாதையுடன் அழைக்கப்படும் சுபாஷ் சந்திர போஸ் இந்திய சுதந்திரப் போராட்டத்தை தலைவராவார். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் வெளிநாடுகளில் போர்க் கைதிகளாய் இருந்த நூற்றுக் கணக்கான இந்தியர்களை ஒன்று திரட்டி இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியவர்.

இவர் 1945 ஓகஸ்ட் 18 அன்று தாய்வான் நாட்டில் ஒரு விமான விபத்தில் இறந்து விட்டதாக கருதப்பட்டாலும் அவர் அப்போது உயிரிழக்கவில்லை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

அவர் ரஷ்யாவிற்கு சென்று 1970 களில் இறந்து விட்டதாகவும் அல்லது ஒரு சந்நியாசியின் வடிவில் வட இந்தியாவில் மறைமுகமாக வாழ்ந்து 1985 இல் இறந்து விட்டதாகவும் பல கருத்துக்கள் உள்ளன. 1945 ஆம் வருடம் ஓகஸ்ட் 14 முதல் செப்டெம்பர் 20 வரை எந்த விமான விபத்தும் தாய்வானில் ஏற்படவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்திருப்பது போஸ் அவ்வாண்டு இறக்கவில்லை என்ற வாதத்திற்கு வலுவூட்டியுள்ளது.

### பிறப்பு

இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் கட்டாக் எனும் இடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாள் வங்காள இந்து குடும்பத்தில் சுபாஸ் சந்திரபோஸ் பிறந்தார். இவரது தந்தையின் குடும்பம் 27 தலைமுறையாக வங்க மன்னர்களின் படைத்தலைவர்களாகவும் நிதி மற்றும் போர் அமைச்சர்களாகவும் பணியாற்றி வந்த பெருமைமிக்க மரபுவழியை உடையது. 8 ஆண் பிள்ளைகளையும் 6 பெண் பிள்ளைகளையும் கொண்ட இக்குடும்பத்தில் 9ஆவது பிள்ளையாகப் பிறந்தவரே சுபாஸ் சந்திரபோஸ். சிறு வயது முதல் பல பிள்ளைகளுடன் வளர்ந்தபடியால் சந்திரபோஸ் தன் சிறு வயதில் தாய் தந்தையரை விட தன்னைக் கவனித்து வந்த தாதியான சாரதா என்பவருடன் பெரிதும் இருந்தார்.

### கல்வி

ஐந்து வயதான போது கட்டாக்கிலுள்ள பாப்டிஸ்ட் மிஷன் ஆரம்பப் பள்ளியில் இணைந்த சுபாஷ் ஏழு ஆண்டுகள் அங்கு கல்வி பயின்றார். பின்னர் தன் உயர்கல்வியை கொல்கத்தா ரேவன்ஷா கல்லூரியில் தொடங்கிய சந்திரபோஸ் 1913 ஆம் ஆண்டுத் தேர்வில் கொல்கத்தா பல்கலைக்கழக எல்லைக்குள் 2 ஆவது மாணவராகத் தேறினார்.

1941 இல் சுதந்திர இந்திய மையம் என்ற அமைப்பை தொடங்கி ஆசாத்ஹிந்த் என்ற ரேடியோவையும் உருவாக்கி சுதந்திர தாகத்தை அங்கிருந்த இந்திய மக்களிடம் விதைத்தார். நாட்டுக்கு என தனி கொடியை உருவாக்கி ஜனகன பாடலை தேசிய கீதமாக அறிவித்தார். 1943 ஒக்டோபர் 21 இல் சிங்கப்பூரில் நடந்த மாநாட்டில் போஸ் சுதந்திர அரசு பிரகடனத்தை வெளியிட்டார். டிசெம்பர் 29 ஆம் திகதி அரசின் தலைவராக தேசியக் கொடியை ஏற்றினார்.

### திருமணம்

1933 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி உடல் நிலை சரியில்லை என வியன்னா சென்றவர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளான செக்கோசிலவாக்கியா, போலந்து, ஹங்கேரி, இத்தாலி ஜேர்மனி என பயணம் மேற்கொண்டு அந்த நாடுகளில் இருந்த இந்திய இளைஞர்கள்ள சந்தித்து நாட்டின் விடுதலையை பற்றி பேசி ஒத்துழைப்பு கேட்டார்.

ஐரோப்பாவின் அரசியல் வாதிகளையும் ஆட்சியாளர்களையும் சந்தித்து விடுதலைக்கு உதவும்படி கேட்டார். 1935 இல் முசோலினியை சந்தித்து ஆதரவு கேட்டார். பயணத்தில் ஆஸ்திரியாவை சேர்ந்த எமிலியின் அறிமுகம் கிடைத்தது. அவரை தனது உதவியாளராக்கிக் கொண்டார். உடல் நலம் தேறியது. அதற்கு எமிலியும் ஒரு காரணம். இருவருக்குள்ளும் காதல் அரும்பியது. 1937 டிசெம்பர் 27 இல் எமிலியை போஸ் இரகசியமாக திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 1942 இல் அனிதா போஸ் என்ற ஒரு மகள் பிறந்தார்.

### பெண்ணுரிமை

இவர் தன் இந்திய தேசிய இராணுவத்தில் பெண்களுக்கென தனிப் பிரிவான ஜான்சி ராணி படையை தொடங்கியவர். ஒருமுறை ஜான்சி ராணி படை கூடாரப் பகுதிக்குள் இவர் நுழைந்ததை வேறு யாரோ என்று எண்ணி கோவிந்தம்மாள் என்னும் பெண் அதிகாரி அவரை தடுத்து நிறுத்தினார். அதைப் பொருட்படுத்தாமல் அவருக்கே அப்படையின் உயரிய விருதான லாண்ட்சு நாயக் விருதை வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தது.

### பாரதரத்னா விருது

1992 இல் சுபாஷ் சந்திரபோசின் இறப்புக்குப் பின்னான இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. ஆனால் விருது வழங்கும் குழுவால் சுபாஷ் சந்திர போஸின் இறப்பு குறித்த ஆதாரங்களைத் தரமுடியவி ல்லை. எனவே உச்சநீதிமன்ற ஆணையின் படி இவ்விருது திரும்ப வாங்கப்பட்டது.

### திரைப்படங்கள்

2010: கன்னடத் திரைப்படம், தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளிலும் உள்ள சுப்பர்

2008:தெலுங்குமொழித்திரைப்படம்சுபாஷ்சந்திரபோஸ்

2005:இந்தி மொழித்திரைப்படம் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மறுக்கப்பட்ட கதாநாயகன்

2002:இந்தி மொழித்திரைப்படமான பகத் சிங்கின் கதை இல் போஸ் பற்றிய காட்சிகள்

1966:வங்காளி மொழித்திரைப்படம் சுபாஷ் சந்திரா

1950:இந்தி மொழித்திரைப்படமான சமாடி இல் போஸின் சிறு பாத்திரம் (தொகு) ஆவணப் படங்கள்

### நூல்கள்

1986: பெரும் இந்தியப் புதினம் (தி கிரேட் இன்டியன் நோவல்) என்ற புதினத்தில் போஸ் பற்றிய கதாபாத்திரம்

2012 : கே.எஸ்.சிறிவஸ்டவா எழுதிய சுபாஷ் சந்திர போஸ் ஆகியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பிரதேச செயலாளர் பிரிவின் பட்டிக் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட தமிழர் பூர்வீகக் கிராமமான அரியகுண்டான், அதாவெட்டுவெவ என்று சிங்களப் பெயரிடப்பட்டு வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசைச் சாடுகின்றார்- வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் கீழ் இயங்கிய வெலிஓயா, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நிர்வாகத்தின் கீழ் யுத்தம் ஓய்விற்கு வந்தபின்னர் புதிதாக வலிந்து இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இப்புதிய பிரதேச செயலகமானது, அரச

பிரிவின் நேரடிக்கண்காணிப்பிற்குள் வேலைத்திட்டமாகவே மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

காலங்காலமாக வவுனியா மாவட்ட நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு நிர்வாகக் கிராமமாக இயங்கிவந்த அரியகுண்டான் தற்போது முலலைத்தீவு மாவட்டத்துடன் வலிந்து இணைக்கப்பட்டுள்ள வெலிஓயா பிரதேசச் செயலாளர் பிரிவினுள் சேர்க்கப் பட்டுள்ளது. யுத்தகால இடப்பெயர்வுகளுக்கு முன்னர். நெடுங்கேணியைச் சேர்ந்த பட்டிக்குடியிருப்பு கிராம

பண்ணை உரிமையாளர்களுக்கு முறையே ஆயிரம் ஏக்கர் காணிகளும் பயிற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இவற்றோடு இப்பிரதேசத்தில் 80 இற்கும் மேற்பட்ட தமிழ்க் கிராமங்கள் காணப்படுவதுடன் இங்கு உறுதிகள் மூலம் உரிமையளிக்கப்பட்ட காணி நிலங்கள் உள்ளன. இங்குள்ள கிராமங்கள், ஆறுகள், மலைகள் என்பன வரலாற்றுக்காலம் முதல் தமிழ்ப்பெயருடன், தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசமாகும்.


1983 ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் அன்றைய

ளப்படுகின்றன.

நெடுங்கேணியின் பட்டிக்குடியிருப்பு, ஒலுமடு, கற்குளம் பிரிவுகளில் மீள்குடியேறியோருக்குச் சொந்தமான தனிக்கல்லு இலுப்பைக்குளம் மற்றும் ஒதிய மலை ஆகிய மூன்று குளங்களின் கீழ் வரும் 500 ஏக்கர் வயற்காணிகளின் உரிமையாளர்களை விரட்டிவிட்டு வெலிஓயா சிங்களவர்களை இங்கு பயிர்ச்செய்கைக்கு அனுமதித்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் இச் செயல்களைச் செய்த வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் உட்பட

# நெடுங்கேணியில் பறிபோயுள்ள மற்றொரு தமிழ்க் கிராமம்





நிர்வாக சேவையின் இதுவரை நிலவிய நிர்வாக விதிமுறைக்குப் புறம்பாக வர்த்தமானியில் அறிவிக்கப்படாமலேயே முல்லைத் தீவு மாவட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், அதன் எல்லைகள், கிராமங்கள் தெடர்பாகவும் தெளிவற்ற நிலையிலேயே உள்ளது. இப்புதிய பிரதேச செயலாளர் பிரிவான வெலிஓயாவுடன் ஏற்கனவே முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பிரிவின் கீழிருந்த பல பூர்வீகத் தமிழ் கிராமங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

அவ்வரிசையில், நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவின்கீழிருந்த 90ஹெக் டேயர் வயலுக்குப் பாசனத்தை வழங்கும் 14 சதுர கி.மீ நீரேந்தும் பரப்பளவு உள்ளதுமான கொக்கைச்சாண் குளம் மற்றும் நீர்ப்பாச னப்பகுதிப் பூர்வீகத் தமிழ்க் கிராமத்தவர்கள் இனக்கலவரத்தில் வெளியேற, இவர்களது 200 ஏக்கர் வயற்காணி மற்றும் குடியிருப்புக் காணிகளில் 2010 ஆம் ஆண்டில் 165 சிங்களக் குடும்பங்கள் குடி யேற்றப்பட்டு இக்கிராமத்திற்கு கலாபோகஸ்வெவ என சிங்களப் பெயர் சூட்டப்பட்டு வவுனியா தெற்கு சிங்களப்பிரதேச செயலாளர் பிரிவில் இணைக்கப் பட்டு தற்போது மற்றுமொரு நிர்வாகப் பிரிவுக்கு மாற்ற எத்த

அலுவலர் பிரிவின் கீழ்வரும் பட்டிக்குடியிருப்பு, பாவற்காய்க் குளம், விண்ணாங்குப்பிட்டி, அரியகுண்டான், தனிக்கல்லு, வண்ணான் கேணி, துவரங்குளம், வயல்குடியிருப்பு, ஆகிய கிராமங்களில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 606 பேர்

ஆட்சியாளர்களால் இப்பிரதேசம் மகாவலி எல் (L) வலயம் என வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு, தென்னிலங்கைச் சிங்களவர்கள் இங்கு குடியேற்றப்பட்டனர்.

பூர்வீகத் தமிழர்கள் விரட்டியடிக்

இராணுவ அதிகாரி மற்றும் சிவில் அதிகாரி ஆகியோரால் தமிழ் விவசாயிகள் அழைக்கப்பட்டு பின்வருமாறு கோரப்பட்டுள்ளனர். இந்தக்காணிகள் யாவும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் இவர்கள் அனைவரையும் வெலிஓயாபிரதேச செயலாளர் பிரிவிற்குள்வருமாறும் மறுப்பவர்களின் காணி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டு காணிகள் மாகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் கொண்டுவரப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விடயத்தினை 28.12. 2010 திகதிய கடிதம் மூலம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன் இதற்கு விளக்கமளிக்கக் கோரி காணி ஆணையாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பிய கடிதத்திற்குப் பதிலாக அவரால், காணி ஆணையாளர் நாயகத்திற்கு முகவரி இட்டு, ஜனாதிபதிக்கும் எனக்கும் பிரதியிடப் பட்ட 06.09.2011 திகதிய கடிதத்தில், இப்பிரதேசங்களில் தற்போது இலங்கை மகாவலி அதிகார சபையினால் எந்தவொரு அபிவிருத்தியும் நிறைவேற்றப்படாததால், அக்காணிகள் மகாவலி அபிவிருத்திப் பிரேரணையின் கீழ் கொண்டுவருவதற்கான திட்டம் எதுவும் இல்லையென்று குறிப்பிட்டிருந்தார்.

இப்பிரதேசத்தில் காணப்படும் நீர் நிலைகளைப் புனரமைக்காது, அதற்கான திட்டமெதனையும் வகுக்காமல், மகாவலி நீர்வழங்கல் மேற்கொள்ள, நீர்மட்ட அளவீடுகள் குறித்தோ, நீர்வளங்கும் உயர் அளவு நிலையில் இப்பிரதேசம் அமைந்துள்ளதா என்பது குறித்தோ ஆய்வுகள், ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் இத்திட்டத்தின் உள்நோக்கம் பூர்வீகத் தமிழர்களை விரட்டியடித்துவிட்டு சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளும் நோக்கிலேயே அரசினால் நன்கு திட்டமிட்டு நிர்வாக ரீதியில் மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகிறது.

*காணிக்காரரை காணியில் விட* வேண்டும் என்ற இயற்கை நீதிச் சட்டம் மீறப்படும் இத்தகைய மக்கள் விரோத அரசின் செயற்பாடு உடன் விலக்கிக் கொள்ளப்படல் வேண்டும் எனவும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அரியகுண்டான் என்ற தமிழ்க் கிராமத்தை 'அதாவெட்டுவெவ' ஆக மாற்றிக்கொண்டது சிங்கள குடியேற்றவாதம்

னிக்கப்படுகிறது.

இத்தகைய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தற்போது பட்டிக் குடியிருப்பு கிராம அலுவலர்பிரிவின் கீழிருந்த அரிய குண்டான் தமிழ்க்கிராமம் அதாவெட்டுவெவ என்று சிங்களப் பெயரிடப்பட்டு, அங்கு 65 சிங்களக்குடும்பங்கள், திட்டமிட்டு அரசால் குடியேற்றப் பட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களுள் குடியேற்றப்பட்ட இச்சிங்கள குடியேற்றவாசிகளுக்கு தற்காலிக, நிரந்தரவீட்டு வசதிகள் வெலிஓயா பிரதேச செயலாளர்

வசித்ததாக மாவட்டத் திட்டமிடல் செயலக புள்ளிவிபரக் கையேடு தெரிவிக்கின்றது.

அரியகுண்டான் குளத்தின் கீழ் 125 ஏக்கர் பாசனக்காணியும் சூழவுள்ள ஏனைய பத்து சிறு குளங்களின் கீழ் 500 ஏக்கர் வயல்காணிகளும் உள்ளன. கல்லடிக்குளத்தில் 300 ஏக்கரும் வண்ணாகரிச்ச குளத்தில் 250 ஏக்கரும் சேனப்பன் குளத்தில் 250 ஏக்கரும் தனிக்கல்லு மற்றும் எருக்கலம்புலவில் தலா 450 ஏக்கரும் தமிழ் மக்களுக்குச் சொந்தமாக [illegible] பாம், கென்[illegible]

கப்பட்டனர். மணலாறு பிரதேசமும் விழுங்கப்பட்டது. ஒவ்வொரு இனக் கலவரமும் ஓய்வுக்கு வரும்வேளையில் தமிழர் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்வதையே அரசு தனது நிகழ்ச்சி நிரலாகக் கொண்டுள்ளது. அதனைப் போன்றே தற்போது யுத்தம் ஓய்ந்த பின்னர் நெடுங்கேணி, அரியகுண்டான், கொக்கைச்சாண் குளம் மற்றும் ஏனைய தமிழக்கிராமங்களி லும் அதே பாணியிலேயே சிங்களக்குடி [illegible] ஆட்சியாளர்களால், [illegible] இலாவகமாக மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் தொகையுடன் வங்கதேச பிக்கு கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு உற்பத்தி சிகரெட் தொகையுடன் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலகம கங்கத ஸ்ரீ சுசிமாரம விகாரையின் விகாராதிபதியே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த பிக்குவே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் இருந்து 2 ஆயிரத்து 820 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரான பிக்கு கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

திவுலகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இலவசக் கல்வியை இல்லாதொழிக்க அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றது

## அகிலவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் இலவசக் கல்வியை இல்லாதொழிப்பதற்காகவே திட்ட மிட்ட விதத்தில் பரீட்சை வினாத்தாள்களில் குளறுபடிகளை அரசாங்கம் ஏற்படுத்துவதாக ஐ.தே.கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அகிலவிராஜ் காரியவசம் எம்.பி. இதனைத் தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வித் துறையில் உருவாகியுள்ள சீர்குலைவுகளை எதிர்த்து எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளேன்.

இலங்கையில் இலவசக் கல்வியை உருவாக்கிய பெருமை ஐ.தே.கட்சியையே சாரும். எனவே அதனை பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

க.பொ.த. உயர்தர பரீட்சையின் இணைந்த கணித வினாத்தாளில் பிழையான கேள்வி வழங்கப்பட்டுள்ளது. "இதுபோன்று பாடசாலைகளில் நடத்தப்படும் தவணை பரீட்சைகளிலும் பிழைகள் ஏற்பட்டுள்ளன.

பரீட்சைகளுக்கு வினாத்தாள்கள் தயாரிக்கும் போது புத்திஜீவிகள் மூவர் அல்லது நான்கு பேர் பரீட்சிப்பார்கள். ஆனால் அந் நடைமுறை இன்று கிடையாது.

ஏனென்றால் இன்று வினாத்தாள்களை அரசியல்வாதிகளின் பிரதிநிதிகளே தயாரிக்கின்றனர். அவ்வாறானவர்களே பரீட்சைகள் திணைக்களத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு பரீட்சை வினாத்தாள்களில் பிழைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான திருத்தங்கள் தயாரிக்கப்பட்டு வினாத்தாள்கள் பொதியில் வைத்து சீல் வைக்கப்பட்டே பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆனால் இன்று இந்நிலை தலைகீழாக மாறியுள்ளது. திருத்தப்பட்ட வினாக்கள் பக்ஸ் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு பரீட்சை வினாத்தாள்களின் இரகசியத்தன்மையை பாதுகாப்பதும் கைவிடப்பட்டுள்ளது.

நாட்டில் கல்வித்துறை முழுமையாக சீர்குலைந்துள்ளது. ஆனால் வினாக்களின் பிழைகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதோடு அப்பிழையான கேள்விக்கு முழுமையான புள்ளிகள் வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

முழுமையான புள்ளிகள் வழங்குவதை ஏற்றுக் கொண்டாலும் பரீட்சைகளுக்காக கண்விழித்து படித்த மாணவர்களுக்கு இதனால் அநீதி ஏற்படுகின்றது.

பிழைகளை ஏற்படுத்தியவர்களை விசாரணை செய்து அவர்களுக்கு தண்டனை வழங்காது அவ்வாறானவர்களை பாதுகாக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுக்கிறது. கல்வித்துறையில் தொடர்ந்து பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றனது என்றார். (அ-2)

# சீன மாகாண அரசாங்கங்கள் இலங்கையில் முதலிட திட்டம்

சீனாவின் மாகாண அரசாங்கங்கள் இலங்கையில் முதலீடு செய்யத்திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் சீன மாகாண அரசாங்கங்கள் இலங்கையில் முதலீடு செய்ய முனைப்பு காட்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் வூஜியானோவோ தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவைத் தொடர்ந்து சீன மாகாண அரசாங்கங்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்து முதலீடுகளை செய்யுமாறு சீன வர்த்தகர்களை ஊக்குவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சீன அரச நிறுவனங்களைத் தவிர சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டில் சட்டம் செத்துவிட்டது; கொலையாளி விடுதலையாகிறான்

## நாட்டின் நிலை இதுதான் என்கிறார் ஓய்வுபெற்ற நீதிபதி

(கொழும்பு)

இலங்கையில் சட்டம் இல்லை. பொலிஸாரை மக்கள் நம்புவதில்லை. அரசாங்கத்துடன் தொடர்புள்ள கொலைகாரனோ, ரவுடியோ விடுவிக்கப்படுகின்றனர் என ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ரி.எம். வராவெவ கூறியுள்ளார்.

அனைத்து பிரஜைகளுக்கும் சட்டம் சமத்துவமாகுவதை உறுதிப்படுத்தும் அரசியல் இயக்கமொன்று தலைமை தாங்குவதற்கு தான் தயார் என அவர் கூறியுள்ளார்.

கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்,

சட்டத்தின் ஆட்சி அருகி வருவதற்கு எதிராகவும் அமைதியான சுதந்திரமான சமூகத்துக்காகவும் அனைத்து மனிதர்களும் சட்டத்தின் முன் சமமாக விளங்கும் சமூகத்தை உருவாக்குவதுமே எனது அரசியல் இலட்சியங்களாகும். இதற்காக ஒவ்வொரு அமைப்புக்கும் நான் தலைமை தாங்கி இத்தகைய சமூகத்தை ஏற்படுத்துவேன்

சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்கும் மக்கள் இன்றைய அரசியலில் பிரவேசிக்க முடியாது.

தற்போது ரவுடிகள், திருடர்கள், போதைப் பொருள் வியாபாரிகள் போன்றோரே தற்போது அரசியலில் பிரவேசிக்கமுடியும். 18 ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கமானது சுதந்திரமான சட்டத்திற்கு கட்டுப்பட்ட சமூகத்திற்கான மிகப்பெரிய தடங்கலாகும்.

17 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களானவை ஜனாதிபதிக்கு இடையூறாகும். ஏனெனில், அவர்கள் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றாற் போல் நாட்டை கட்டுப்படுத்த முடியாது. ஆனால், 18 ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அரசவளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை நிறுத்துவதற்கு உத்தரவிட தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை. அந்த உத்தரவும் ஜனாதிபதியினாலேயே பிறப்பிக்கப்படுகிறது. எவ்வாறு தேர்தல் நடத்தப்பட வேண்டும். எவ்வாறு வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிடும் நிலை விரைவில் வரும் என அவர் கூறினார். (அ-2)

# வாகனத்தை உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)


NPXC 1535 இலக்க மோட்டார் சைக்கிள் ஒன்றும் சைக்கிள் ஒன்றும் யாழ். மற்றும் கோப்பாய் பொலிஸாரால் மன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறும் 06 மாதங்களுக்கு மேல் உரிமை கோரத் தவறும் பட்சத்தில் அரசுடமையாக்கப்படும் என்றும் யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)


af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Center in Jaffna
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வ முள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்:- சனி,ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61,Kachcheri-Nallur Road ,Jaffna T.P: 021 2228093
E.mail:alliancejaffna@yahoo.com
(ஷ்க்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்
(230)

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்ட இரத்த வகைத் தட்டுப்பாட்டினை கருத்திற் கொண்டு அண்மையில் யாழ். நீராவியடி நண்பர்கள் கழகம் இரத்ததானம் வழங்கும் நிகழ்வினை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் மேற்கொண்ட போது.... படம்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

194

## மன்னர் கடனைத் தீர்த்த தெனாலிராமன்

தெனாலிராமன் கிருஷ்ண தேவராயர் அரசசபையில் விகடகவியாக பொறுப்பேற்ற பின்னர் அவனுக்கு நிறையத் தொல்லைகள் தொடர ஆரம்பித்தன. தான் பிறந்த ஊரில் மிகவும் கஷ்டப்பட்ட தெனாலிராமன் பிழைப்பைத்தேடி விஜயநகரத்திற்கு வந்து மன்னர் கிருஷ்ணதேவராயரைச் சந்திக்க அரும் பாடுபட்டான். எளிதில் மன்னரைச் சந்திக்க முடியவில்லை.


மன்னரைச் சுற்றியிருந்தவர்கள் தெனாலிராமனை எளிதில் மன்னரிடம் நெருங்க விடவில்லை. முக்கியமாக ராஜகுருவுக்கு தெனாலிராமனின் நகைச்சுவைப் பேச்சும் கூர்மையான அறிவுத்திறமையும் அவருக்கு ஒருவித பயத்தை உண்டாக்கி விட்டது. காரணம் தெனாலிராமன் அரசரைச் சந்தித்து அவனுடைய பேச்சாற்றலால் கிருஷ்ணதேவராயரை அவன் பக்கம் இழுத்துவிட்டால்தான் தெனாலிராமனிடம் அடங்கிப் போகவேண்டுமே என்று கவலைப்பட்டார். மூத்த அமைச்சர்கள் பலரும் தெனாலிராமனை மன்னர் கிருஷ்ணதேவராயரைச் சந்திக்கவிடாமல் இடையூறுகள் செய்தனர்.

ஆனால் தெனாலி ராமன் காளிதேவி அருளால் அத்தனை தடைகளையும் தவிடு பொடியாக்கிவிட்டான். மன்னர் கிருஷ்ணதேவராயரைச் சந்தித்த தெனாலிராமன் விரைவில் மன்னர் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி விட்டான்.

மன்னர் தெனாலிராமனுக்கு ஒரு அழகிய மாளிகையை அவன் குடியிருக்க அளித்திருந்தார். தெனாலிராமன் விஜயநகரத்தில் ஒரு பெரிய மாளிகையில் குடியிருப்பதைக் கேள்விப்பட்ட அவன் உறவினர்களும் அவனது மனைவியின் உறவினர்களும் அடிக்கடி வந்து அவன் வீட்டில் தங்க ஆரம்பித்தனர்.

அவன் கஷ்டப்பட்ட போது விலகி வெகு தூரம் சென்ற உற வினர்கள் அவன் வசதியாக வாழ்கிறான் என்று கேள்விப்பட்டவுடன் நெருங்கி வந்து உறவாட ஆரம்பித்தனர். உறவினர்கள் வருகை அதிகமானதால் அவர்களுக்கு உணவளிக்கவும் அவர்களுக் குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கவும் தெனாலிராமன் அடிக்கடி மன்னர் கிருஷ்ணதேவராயரிடம் கடன்வாங்க ஆரம்பித்தான். முதலில் சிறிய அளவு கடனாக இருந்த தொகை நாளடைவில் வளர்ந்து ஒரு பெரிய அதுவும் திருப்பிச் செலுத்த முடியாதளவுக்கு வளர்ந்து விட்டது.

தெனாலிராமன் மன் னரிடம்



நிறையக் கடன் வாங்கி இருப்பதை தெரிந்துகொண்ட ராஜகுருவும் மற்றும் சில அமைச்சர்களும் மன்னரை அணுகி அவரிடம் தெனாலிராமனைப் பற்றி பொய்யான தகவல்களை சொல்ல ஆரம்பித்தனர்.

அவர்கள் மன்னரிடம் மன்னர் மன்னா! தெனாலிராமன் நீங்கள் நினைப்பது போல் பணவசதி இல்லாமல் இல்லை. நீங்கள் அவ்வப்போது அளித்த வெகுமதிகளே ஒரு அறை நிறைய நிறைந்துள்ளது. அதை வெளி யில் காட்டிக்கொள்ளாத தெனாலிராமன் தன்னிடம் எதுவும் இல்லாதது போல் நடிக்கிறான். இல்லையென்று தங்களிடம் கடன் வாங்கியது எல்லாம் தெனாலிராமன் போடும் வெளிவேடம்.

அவன் உங்களை நன்றாகவே ஏமாற்றுகிறான். அவன் நினைத்தால் தங்களிடம் வாங்கிய கடனை நிமிடத்தில் திருப்பிக் கொடுத்துவிடலாம்.

ஆகவே தாங்கள் நாளை தெனாலிராமன் சபைக்கு வந்ததும் அவனிடம் அவன் தங்களிடம் சிறுகச் சிறுக வாங்கிய கடனை மொத்தமாக திருப்பிக் கொடுக்குமாறு கேளுங்கள் என்றார்கள்.

அமைச்சர்களும் ராஜகுருவும் கூறியதை உண்மை என்று நம்பிய கிருஷ்ணதேவராயரும் மறுநாள் தெனாலிராமன் அரசசபைக்கு வந்ததும் அவனிடம் அவர்தான் அளித்த கடனை உடனே திருப்பிக் கொடுக்குமாறு கேட்டார்.

மன்னர் கடனைப் பற்றிக் கேட்டதும் தெனாலிராமன் ஆடிப்போய் விட்டான். உண்மையில் அவனிடம் கடனைத் திருப்பிக் கொடுக்கும் அளவிற்கு பணம் எதுவும் இல்லை.

தெனாலிராமன் மிகவும் தாழ்ந்த குரலில் கிருஷ்ண தேவராயரைப் பார்த்து அரசே! என்னிடம் வேண்டிய அளவு பணம் இருந்திருந்தால் நான் தங்களிடம் ஏன் கடன் வாங்கப்போகிறேன். உண்மையிலேயே என்னிடம் பணம் ஏதும் இல்லை என்று கூறினான்.

ஆனால் மன்னர் தெனாலிராமன் கூறுவதை ஏற்க மறுத்து கடனை உடனே அடைத்துவிடுமாறு சற்றுக்கடுமையான வார்த்தைகளால் கேட்டார். மன்னர் தொல்லை தாங்கமுடியாத தெனாலிராமன் அரசசபைக்குச் செல்வதையே நிறுத்திவிட்டான்.

## தெனாலிராமன் கதைகள்

தெனாலிராமன் அரசசபைக்கு வருவதை நிறுத்திவிட்டதால் மன்னர் தெனாலிராமனைத் தேடி அவன் வீட்டிற்கு சென்றார்.

மன்னர் வருவதை முன்கூட்டியே அறிந்து கொண்ட தெனாலிராமன் அவர் வரும் வேளையில் உடல் நலம் இல்லாதவன் போல் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

தெனாலிராமன் வீட்டிற்கு வந்த மன்னர் வீட்டில் இருந்த தெனாலிராமன் மனைவியிடம் அவள் கணவன் எங்கே என்று கேட்டார்.

தெனாலிராமன் மனைவியும் மன்னரைப் பார்த்து அரசே! என் கணவர் தங்களிடம் இருந்து வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கமுடியாததால் படுத்த படுக்கையாகி விட்டார்.

தங்களிடம் வாங்கிய பணத்தை திருப்பிக்கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கம்தான் அவரை படுத்த படுக்கையாக்கி விட்டது.

தாங்கள் என் கணவரைப் பார்த்து அவர் தங்களிடம் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்கவேண்டாம் என்று கூறினால்போதும் அவர் வியாதி குணமாகி எழுந்து நடக்க ஆரம்பித்து விடுவார் என்று கூறினாள்.

தெனாலிராமன் மனைவி கூறியதைக்கேட்ட அரசர் தெனாலிராமன் படுத்திருந்த அறைக்குச் சென்று அவனிடம் தெனாலிராமா! உன் நிலைமை எனக்குப் பெரும் வேதனையை அளிக்கிறது.

நீ என்னிடம் வாங்கிய கடனை தரவேண்டாம். அனைத்துக் கடன்களையும் இரத்துச் செய்துவிட்டேன். நீ மன வேதனையோடு சாக வேண்டாம். கடன் தொல்லையும் சுமையும் குறைந்த நீ நிம்மதியாக இறக்கலாம் என்றார் மன்னர்.

மன்னர் கடனைத் இரத்துச் செய்தததைக் காதால் கேட்ட தெனாலிராமன் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து மன்னர் கால்களில் விழுந்து அரசே தாங்கள் நான் தங்களிடம் வாங்கிய கடனை இரத்துச் செய்துவிட்ட பின்னர் நான் ஏன் சாகவேண்டும். என் வியாதி பறந்து விட்டது. நீங்கள் நான்வாங்கிய கடன் தொகையை இரத்துச் செய்தது முன்பே தெரிந்திருந்தால் இன்னும் நிறையக் கடன் வாங்கியிருப்பேன் என்றான் சிரித்துக்கொண்டே.

கிருஷ்ணதேவராயரும் தெனாலிராமனின் கூர்மையான அறிவாற்றலால் அவன் வாங்கிய கடனை அவன் திருப்பிச் செலுத்தாமலேயே அடைத்து விட்டதை எண்ணி மகிழ்ச்சியடைந்து அவனுக்கு நிறையப் பரிசுகள் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெமுனுவொச் படைப்பிரிவிற்கு ஜனாதிபதி நிற விருது

இராணுவத்தினரின் கெமுனுவொச் படைப்பிரிவிற்கு ஜனாதிபதி நிற விருது கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வால் வழங்கி வைக்கப்பட்டது.

குருவிட்டையில் அமைந்துள்ள கெமுனு வொச் தலைமையகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன் றாம் கெமுனுவொச் படைப்பிரிவு ஜனதிபதி மற் றும் றெஜிமன்டல் விருதுகள் வழங்கப்பட்டது.

கெமுனுவொச்சின் தன்னலமற்ற, விசுவா சமான மற்றும் கௌரவமான 50 வருடகால சேவைக்கு மரியாதை வழங்கும் முகமாக இவ்விருது இம்முறை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 1980 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இப்படைப்பிரிவுகளுக்கு இவ் விருது வழங் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி இப்பு கழ்பெற்ற விருதானது நாட்டின் நலன்களை பாதுகாக்க வீரர்கள் ஆற்றிய வீரதீர செயல் களுக்காக வழங்கப்பட்டது எனவும் நாட்டின் நலன்களை பாதுகாத்து நிலைநிறுத்த உறுதி மொழியளிக்க வேண்டும் எனவும் தெரிவித் தார். இந் நிகழ்வில் ஜனாதிபதியின் செயலா ளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண் டனர். (அ-2)

# ஆஸி. செல்ல முற்பட்ட 57 பேர் கைதாகினர்

(திருகோணமலை)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு படகில் பயணிக்க முற்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்சம் 57 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

புல்மோட்டை கரையோரப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் கடற்படை யினரால் நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

52 தமிழர்களும் 5 சிங்களவர்களுமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (அ-2)

# பல்கலை.மாணவர்களை கண்காணிக்க புலனாய்வுப் பிரிவினர் பல்கலைக்கழகத்தில்

## ஐ.தே.க. எம்.பி. அகிலவிராஜ் குற்றச்சாட்டு

பல்கலைக்கழக மாணவர்களை கண்கா ணிப்பதற்காக இராணுவப் புலனாய்வுப் பிரி வினரை அரசாங்கம் பல்கலைக்கழகங்க ளுக்குள் அனுப்பி வைத்துள்ளதாக ஐ.தே.கட் சியின் பாராளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார்.

இசட் புள்ளிகள் பிரச்சினையில் நீதிமன் றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அகில விராஜ் எம்.பி தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டை இராணுவக் கட்டுப்பாட்டில் வைத் திருக்கும் அரசாங்கம் இன்று கல்வித்துறை யையும் இராணுவமயமாக்கும் நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது. இராணுவத்தி லுள்ள 18-25 வயதிற்கிடைப்பட்ட பெண்கள், ஆண்களென 80 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் உளவு பார்ப்பதற்காக பத்தரமுல்லையிலுள்ள படை முகாமில் பயிற்சியளிக்கப்படுகின்றது.

இவ்வாறு பயிற்சியளிக்கப்படுபவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் மாணவர்களை போன்று அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாணவர்கள் சங்கங்களின் தலைவர்களை காதலிக்குமாறும் தகவல்களை பெறுமாறும் பெண் படையினருக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டுள்ளன.

இவ்வாறானதோர் நடவடிக்கையொன் றில் ஈடுபட்டிருந்த போது இராணுவத்தில் பணிபுரியும் பெண் ஒருவர் அடையாளம் காணப்பட்ட பின்னர் இத் தகவல்கள் வெளி வந்துள்ளன. அனைத்துப் பல்கலைக்கழகங் களுக்கும் இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட 80 படையினர் வீதம் மாணவர்களைப் போன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இசட் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாண வர்களுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் நடவ டிக் கைகளை மேற்கொண்டிருந்தால் நியா யம் கிடைத்திருக்கும் என்றும் அவர் தெரிவி த்தார். (அ-2)

# ஊ.சே.நி. மோசடி குறித்து தெளிவுபடுத்த துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியில் பங்குச் சந்தை யில் மூதலீடு செய்வதால் ஏற்பட்டுள்ள மோச டிகள் குறித்து ஆராயுமாறு வலியுறுத்தி சுதந் திர வர்த்தக வலய சேவையாளர்களை தெளி வுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை, மருதானை நார ஹேன்பிட்டி ஆகிய பகுதிகளில் இது தொடர் பான துண்டுப் பிரசுரம் நேற்றைய தினம் விநியோகிக்கப்பட்டது.

இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள தகவ லின் படி ஊழியர் சேமலாப நிதியத்தில் கடந்த வருடம் 16 ஆயிரம் மில்லியன் நட்டம் ஏற் பட்டுள்ளதென சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கத்தின் செயலாளர் அன்டன் மார்க்ஸ் குறிப்பிட்டுள் ளார்.

இம்மோசடி குறித்து ஆராய பாராளுமன்ற செயற்குழு அமைத்து குற்றவாளிகள் தண்டிக் கப்பட வேண்டும் என தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் 21 தொழிற்சங்கங்கள் ஒன்றி ணைந்து ஜனாதிபதிக்கு இது தொடர்பான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சீனாவிலிருந்து விசேடகுழு வருகை

(புத்தளம்)

புத்தளம் -நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள இயந்திர கோளாறை சரி செய்ய சீனாவில் இருந்து விசேட குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

கோளாறை சரி செய்யும் பணிகளில் ஈடு பட்டுள்ள குழுவினரோடு புதிய குழுவினரும் இணைந்து செயற்படுவர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதம்27 ஆம் திகதி வரை நாட்டின் பல பாகங்களிலும் 3 மணித் தியாலங்கள் மற்றும் 20 நிமிட மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அநுர விஜேபால குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வவுனியாவில் சுற்றிவளைப்பு; நேற்று முன்தினம் மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது மூன்று பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிள்ளையார்குளம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

தற்கொலை குண்டுதாரிகள் சிலர் வீடொன்றில் தங்கி இருப்பதாக பொலிஸா ருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து இந்த தேடுதல் மேற்கொள்ளப் பட்டது.

எனினும் இந்த வீட்டில் அவ்வாறான யாரும் இருக்கவில்லை.

பின்னர் குறித்த பிரதேசத்தில் சந்தேகத் துக்கு இடமான முறையில் நடமாடிய மூவ ரும் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# அரசியல் வன்முறையை வன்மையாக கண்டிக்கிறேன்

## அசாத்சாலி கண்டன அறிக்கை

அம்பாறை மாவட்டத்தின் எந்த பகுதியி லும் எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதையும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதனையும் எவராலும் தடுக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரசின் கிழக்கு மாகாண சபை வேட்பாளர் அசாத் சாலி தெரிவிக்கின்றார்.

அக்கரைப்பற்றில் சில தினங்களுக்கு முன்னர் அரசியலை காரணமாகக் கொண்டு இடம்பெற்ற வன்முறைகளை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்றில் அண்மையில் இரண்டு அமைச்சர்கள் மற்றும் அவர்களின் ஆதர வாளர்களிடையே ஏற்பட்ட மோதலை கண் டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அசாத் சாலி இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் குறித்த ஒரு பகுதியை அரசாங்கம் எவருக்கும் குத்தகைக் கோ அல்லது முடிசூடிக் கொள்வதற்கோ வழங்கவில்லை என்றும் அவ்வாறு எண்ணி எவரேனும் செயற்படுவார்களாயின் அது அவர்களது அரசியல் வங்குரோத்தின் ஆரம் பமாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என் பதில் நாம் அதிக ஆர்வம் காட்டியதுடன் அதன் பொருட்டு தன்னாலான சகல முயற் சிகளையும் மேற்கொண்டதாகவும் அசாத் சாலி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## அலங்கார உற்சவம்

(மல்லாவி)

மாங்குளம் மாவடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா இம் மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி இம்மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை விநாயகப்பெருமானுக்கு சங்காபி ஷேக ஆராதனைகள் நடைபெற்று தீர்த்தோற் சவத்துடன் நிறைவடையவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-3-15)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 17 . 08 . 1967

மறைவு 19 . 07 . 2012

(212)

## திருமதி.முரளிதரன் ஆன்கலிஸ்ரா

(முன்னாள் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை)

எமது குடும்பத்தலைவி இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 18.08. 2012 (சனிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசார நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருற்றிருக்கும்
கணவன் முரளிதரன், மகன் சுஜித்,
சகோதரர்கள் றோய், பற்றிமா, அனிற்றா,
மருமக்கள் ..., ...,
பெறாமகன் அஸ்வத்

செம்பிகலட்டி,
இடைக்காடு, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு அப்பால் சென்று மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யத்தயார்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**பின்தங்கிய பிரதேச மக்களின் மேம்பாட்டுக்காக நாம் அரசியலுக்கு அப்பால் சென்று மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய தயாராகவுள்ளோம் என நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கிளி.கிருஷ்ணபுரத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் சுமார் 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில், அமையப்பெறவுள்ள இப்பாலத்தை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் இரு மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் போக்குவரத்திற்காக கையளிக்கப்படும். இவ்வாறான பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தும் நோக்கில் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளில் இக் கிருஷ்ணபுரம் கிராமத்தினையும் நாம் முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் இப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட போதிலும் இவர்களின் பொருளாதார மற்றும் வாழ்வியல் மேம்பாட்டில் எவரும் அக்கறை காட்டவில்லை.

இதன் காரணமாகவே இவ்வாறான பகுதிகள் தொடர்ந்தும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன.

எனவே, இன்றுள்ள சாதகமான சூழலை பயன்படுத்தி எமது மக்களின் வாழ்வியலை மேம்படுத்தவும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலும் நாம் முழுக்கவனத்தை செலுத்தியுள்ளோம்.

இதுபோன்று பின்தங்கிய பிரதேச மக்களின் மேம்பாட்டுக்காக நாம் அரசியலுக்கு அப்பால் சென்று மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் சுமார் 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும் இப்பாலமானது கிருஸ்ணபுரம், மலையாள்புரம் தொடக்கம் அதைத் தொடர்ந்து வரும் பல பிரதேசங்களின் போக்குவரத்து மையப்பகுதியில் அமைந்திருப்பதுடன் மழை காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தின் குறித்த பிரதேசத்திற்கும் நகருக்குமான தரை வழித் தொடர்பை துண்டிக்கும் வகையில் பெருக்கெடுக்கும் ஆற்றுப் பகுதியாகவும் அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மின்சார சபை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு குழுவை நியமிக்க இணக்கம்

## முடிவுக்கு வந்தது வேலை நிறுத்தம்

மின்சார சபை ஊழியர்கள் ஒரு வார காலமாக முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் மாலை முடிவுக்கு வந்தது. மின்சார சபை தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் மின்சார சபை நிர்வாகிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையையடுத்தே மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டதாக மின்சாரசபை கூறியது.

தொழில் ஆணையாளர் பேர்ல் வீரசிங்க முன்னிலையில் இந்த பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

மின்சார சபை ஊழியர்களின் சம்பள முர்ண்பாடு தொடர்பில் குழுவொன்றை நியமித்து அதற்கு தீர்வு காண இதன்போது இணக்கம் காணப்பட்டது.

அடுத்ததாக கடந்த முறை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது எச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காதிருக்கவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மின்சார சபை ஊழியர்கள் கடமைக்குத் திரும்பும் போது அவர்களுக்கு எதிராக கெடுபிடிகள் எதுவும் மேற்கொள்ளாதிருக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது.

வேலை நிறுத்தம் என்ற போர்வையில் நாசகார வேலைகளில் ஈடுபடாமல் கடமைக்குத் திரும்புமாறு மின்சார சபை ஊழியர்களுக்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க அழைப்பு விடுத்திருந்தார்.

இது விடயத்தில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மின்சார சபை நிர்வாகத்துடன் பேசி இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று கூறியிருந்த அவர் நாசகார வேலைகளில் ஈடுபடும் மின்சார சேவை பயங்கரவாதிகள் குறித்து தனக்கோ அருகிலுள்ள பொலிஸாருக்கோ அறிவியுங்கள்.

சிறுகுழுவின் தேவைக்காக நாட்டை இருட்டில் வைக்க மேற்கொள்ளும் இந்த முயற்சிக்கு நடுநிலைமையான மின்சார சபை ஊழியர்கள் உதவக்கூடாது. இது தொழிற்சங்க நடவடிக்கை அன்றி பயங்கரவாத நடவடிக்கை.

வைத்தியசாலைகளில் உள்ள சிறுவர்களில் வாழ்வை கேள்விக்குறியாக்கும் வகையிலும் உயர்தர மாணவர்களின் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் அரசியல் நோக்குடனே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். (அ-2)

# போலி நாணயத்தாளுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- வெல்லாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் போலி நாணயத்தாள்களை வைப்பிலிடச் சென்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லாவெளி மக்கள் வங்கிக் கிளைக்கு சென்ற குறித்த நபரிடம் நேற்று மாலை போலி நாணயத்தாள்கள் இருப்பதை கண்டு பிடித்த வங்கி முகாமையாளர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததோடு அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் இரண்டையும் ஆறு ஆயிரம் ரூபா தாள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட திகாரியைச் சேர்ந்த 35 வயதான சந்தேக நபர் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ-2)

# நாட்டின் இறைமைக்காக அண்ணன் செயற்படுவார்

## தம்பி பசில் புகழாரம்

(கொழும்பு)

நாட்டின் இறைமையை உறுதிப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பூகொட பிரதேசத்தில் நடைபெற்ற பொதுச் சந்தை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் நாட்டுக்கு எவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்தாலும் அதனை முறியடிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி காரணமாக சில நாடுகள் எம்மீது கோபமடைந்துள்ளன.

நாட்டின் ஒரு சில பகுதிகள் மட்டுமன்றி சகல பிரதேசங்களிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (அ-2)

# ஒலிபெருக்கி சத்தத்தால் மாணவர்கள் பாதிப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கைவேலியில் உள்ள இராணுவ முகாமில் ஒலிபெருக்கிச் சத்தம் அதிகமாகவுள்ளதால் அப்பகுதி மாணவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்குறித்த இராணுவ முகாமில் பூஜை வழிபாடுகள் ஒலிபெருக்கியில் நடைபெறுவதனால் அதன் சத்தம் அங்குள்ள மாணவர்கள் கல்விகற்க முடியாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் பரீட்சைக்கு தம்மை தயார்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இப் பூஜை வழிபாடுகள் தினமும் காலை, மாலைகளில் இடம்பெறுவதனால் கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தை கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-251)





**வித்தகபுரம், கொல்லன் கலட்டி, மாவைக்கலட்டி ஆகிய கிராம மாணவர்களின் அறிவு விருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் 515 ஆவது படைப்பிரிவினர் வித்தகபுரம் ஜே/223 கிராம அலுவலர் பிரிவில் கணனி ஆய்வு கூடம் ஒன்றினை நிறுவியுள்ளனர்.**

**இவ்வாய்வு கூட திறப்பு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சமுதாயத்திற்கு என்ன நன்மை செய்திருந்தாலும் அது என் சிந்தனையையே சாரும்.

– சேர் ஐசக் நியூட்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்க வேண்டும்

யாழ்ப்பாண மாநகரம் அபிவிருத்தி நோக்கிய பாதையில் புதுமைப்படுத்தவேண்டிய தேவையை கொண்டுள்ளது.

இதற்காக பல்வேறு முன்னெடுப்புகள் அவசியம் என்ற உண்மைகளின் மத்தியில் யாழ்ப்பாண நகர மையத்தில் இருக்கக்கூடிய பஸ் நிலையம் புதிய வடிவத்துடன் சகல வசதியுடன் இருக்கக்கூடிய கட்டிடத் தொகுதியாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

இது தவிர யாழ்ப்பாண முற்றவெளிப் பகுதியில் தற்போது இயங்குகின்ற கொழும்பு பஸ் சேவைக்கான பஸ் தரிப்பு நிலையமும் அதனோடு கூடிய அடிப்படை வசதிகளும் சமகால தேவைகளுடன் நிர்மாணிக்கப்பட வேண்டியவை என்பதை மறந்து விட முடியாது.

இவ்வாறாக யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட யாழ்.நகரம் மற்றும் புறநகர் பகுதிகள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும், யாழ்ப்பாணத்தை அழகு மிளிரும் நகரமாக மாற்றியமைக்கவும் ஏக்பட்ட நிதி மூலதனம் தேவையென்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

இத்தகைய நிதி மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதில் யாழ்ப்பாண மாநகர சபையில் இருக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்துவது மற்றும் சில வளங்களை யாழ்.மாநகர சபைக்கு உரியதாக மாற்றுவது என்பன அவசியம் ஆகின்றன.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்றுக் கொள்வது – யாழ்.மாநகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக அதன் நிர்வாக ஒழுங்கை மாற்றி அமைத்தல் என்பது இங்கு முக்கியமானதாகும்.

சம கால சூழ்நிலையில் வரலாற்றுப் பொக்கிஷங்கள் என்பன வரலாற்றுப் பெருமைகளுடன் மற்றும் அவற்றின் இருப்பு இருந்துவிடவில்லை.

மாறாக வருமானம் ஈட்டல் என்ற விடயத்திலும் கணிசமான செல்வாக்கை அவை தெரிந்து கொண்டன.

குறிப்பாக இன்றை மக்கள் சமூகம் வரலாற்றுப் பொக்கிசங்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் அவற்றை பார்வையிடுவதை காட்டுகின்ற முக்கியத்துவம் என்பன முன்னைய காலத்தை விட கணிசமான அளவு அதிகரித்துள்ளதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இந் நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்றுக் கொள்வதன் மூலம் கோட்டையைப் பார்வையிட வருகிறவர்களிடம் குறிப்பிட்ட கட்டணத்தை அறவிட முடியும்.

இவ்வாறு அறவிடப்படும் கட்டணம் யாழ்ப்பாண மாநகர சபையின் அபிவிருத்திக்கும் அழகு படுத்துவதற்கும் பேர் உதவியாக அமையும்.

யாழ்ப்பாணக் கோட்டையை இப்போது ஏராளமான தென்பகுதி மக்கள் பார்வையிடுகின்றனர். அதேநேரம் வடபகுதி மக்கள் தங்கள் மண்ணில் இருக்கக் கூடிய கோட்டையை பார்வையிடுவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

கோட்டையை பார்க்க தமிழ் மக்களுக்கு அனுமதி உண்டா என்ற ஐயமே இதற்கான காரணமாகும்.

எனவே இத்தகையப் பிரச்சினைக்கெல்லாம் தீர்வுகாண்பதற்கு ஒரே வழி யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்.மாநகர சபை பொறுப்பேற்றுக் கொள்வதுடன் சிறிய கட்டணத்துடன் கூடிய பார்வையிடலுக்கு அனுமதி வழங்கிக் கொள்ளுதலுமாகும். நடக்குமா?

# செயற்கை உணவுத் தயாரிப்பு பயிற்சிக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை Prosthetics and Orthotic பாடசாலையினால் (SLSPO) 2012 கல்வியாண்டுக்கு பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

SLSPO நிறுவன இலங்கைப் பிரஜைகளுக்கான மூன்று வருடப் பயிற்சித் திட்டத்திற்கான (இருவருட கல்விப்பயிற்சி மற்றும் ஒருவருட உள்வாரி மருத்துவப் பயிற்சி) விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

அத்துடன் சகாதார அமைச்சின் நிப்போன் அறக்கட்டளை கம்போடிய அறக்கட்டளையுடன் இணைந்து SLSPO நிறுவனத்தினூடாக இலங்கையருக்கான செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பு மற்றும் அவை சம்பந்தமாக செயற்படுவதற்காக கல்வி மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி அல்லது சிங்கள மொழிப்பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தியும் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது விஞ்ஞான பாடங்கள் பிரிவில் பௌதிக விஞ்ஞானம் அல்லது உயிரியலுக்காக திறமைச்சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தியும் விண்ணப்ப முடிபுத் திகதியன்று 18 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தமது கையெழுத்துக்களில் ஆங்கில மொழியில் எழுதி அழைப்புக்காக தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு சான்றிதழ்களில் போட்டோ பிரதிகளுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு) சுகாதார அமைச்சு, சுவசிறிபாய இல.385, வணக்கத்திற்குரிய பத்தேசம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக தகவல்களை 011 2960 686 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது www.slspo.com எனும் இணையத்தளத்தின் மூலம் அல்லது விரிவான விளம்பரத்தினை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடமுடியும். (அ-9)

# உலக மனிதாபிமான தினம் நாளைய தினம் கொண்டாடப்படுகிறது

உலக மனிதாபிமான தினமானது உலகெங்கிலும் நாளை 19ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

மக்களே மக்களுக்கு உதவுதல் என்ற கருதுகோளுக்கு அமைவாக கடமையின் போது உயிர் நீத்த நற்பணியாளர்களை கௌரவிக்கும் முகமாக இந்த தினம் கொண்டாடப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் விடுத்துள்ள உலக மனிதாபிமான தின செய்தியில்,

இவ்வாண்டுக்குரிய உலக மனிதாபிமான தினமானது உலகெங்கிலும் உள்ள 100 கோடி மக்களை ஒன்று கூட்டி மிகவும் வலுவானதும், மாற்றத்தை ஏற்படுத்த கூடியதுமான கருதுகோளை மேம்படுத்துவதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை வழங்குகிறது.

இந்தக் கருதுகோள் மக்களே மக்களுக்கு உதவுதல் என்பதாகும் கடமையின் போது உயிர் நீத்த நிலையில் நாம் அஞ்சலி செலுத்தும் நற்பணியாளர்களை கௌர விப்பதற்கும், அவலங்களை எதிர்கொள் வோருக்கு விரைந்து உதவி செய்யும் மகோன்னத பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் முயற்சிகளை கொண்டாடுவதற்கும் இதுவே சிறந்த வழியாகும்.

இத்தகைய ஊக்கம் தரும் முயற்சிகளை சித்தரிக்கும் ஒருமைப்பாட்டின் உயிரோட்டமானது உலக மனிதாபிமான தினத்தை வழி நடத்திச் செல்கிறது.

உதவிகளை நாடுவோருக்கு உதவி செய்வதற்காக தமது சொந்த இல்லத்தின் சுகங்களைத் துறந்து செல்லும் நிவாரணப்பணியாளர்களை சந்திக்க வழிவகுத்த வெளிநாட்டுப் பயணங்களில், இத்தகைய உயிரோட்டத்தை உணர்ந்திருக்கிறேன்.

இம் மாத முற்பகுதியில், சிறந்ததொரு உலகத்தை கட்டியெழுப்புவதற்குரிய எமது சர்வதேச திட்டத்திற்காக தமது 'I Was Here' பாடலை அன்பளிப்பாக வழங்கும் பியோன்ஸ் நொவெல்ஸை சந்தித்த சமயத்திலும் அத்தகைய உயிரோட்டத்தைக் கண்டேன்.

கோடிக்கணக்கான மக்கள் எமது இணையத்தளத்தை நாடி, தமது உதவிகளை பதிவு செய்து, தமது செயற்பாடுகளை பகிர்ந்து கொண்டுள்ளார்கள்.

மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்தில் பட்டினி நெருக்கடியைத் தவிர்க்கும் சர்வதேச முயற்சிகள் தொடங்கி சிரியாவின் பொதுமக்களுக்கு உதவி செய்வது முதற் கொண்டு அடுத்த வீட்டி லிருக்கும் அயலவருக்காக செய்யும் சிறிய தொரு நற்பணியும் மக்களுக்காக மக்கள் உதவுதல் திட்டத்தின் உயிரோட்டத்தை வளர்த்து சகலருக்கும் சாதகமான நிலையை உருவாக்கும்.

á u Ø Ä B _ ï ç á www.whd-iwashere.org என்ற இணையத்தளத்தில் பதிவு செய்வதன் மூலம் உலக மனிதநேய தினத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.

ஒரு தனிநபரின் செயல் சிறியதாகத் தோன்றலாம். ஆனால், அந்தச் செயல்கள் ஒன்றாக சேர்ந்தால் அவை உலகம் முழுவதிலும் எதிரொலித்து, சிறந்ததொரு எதிர்காலத்திற்குரிய நிறுத்த முடியாத அலையாக மாறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-6)

## நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவியாக திருமதி ம.கீர்த்தி நாதன், செயலாளராக செல்வி க.கஜந்தா, பொருளாளராக திருமதி செ.உமா தேவி, உபதலைவராக ர.யமுனாவதி, உபசெயலாளராக திருமதி ஸ்ரீ.அனிஸ்ரன் ஆகியோருடன் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். (அ-3-29)

## திருடப்பட்ட மாடுகளின் தோல், தலை கண்டெடுப்பு

(சிவநகர்)

சிவநகர், உருத்திரபுரம் வடக்கு ஆகிய கிராமங்களில் உள்ள மாடுகள் திருடப் பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, மேற்குறித்த கிராமமக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட மாடுகளே 4 வீடுகளில் கட்டப்பட்ட நிலையில் திருடப் பட்டுள்ளன.

திருடப்பட்ட மாடுகளின் தலை மற்றும் தோல் ஆகியவை நேவில் பகுதியில் காணப்படுவதால் இறைச்சிக்காகவே மாடு திருடப்பட்டது தெரியவந்துள்ளது. (அ-3-254)

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் மானிப்பாய் கிளையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளதாக மானிப்பாய் எல்.பி.பினான்ஸ் சமூகம் அறிவித்துள்ளது. (அ-9)

## சிவன் பண்ணைப் பகுதியில் திருட்டு; 50 பவுண் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி சிவன் பண்ணை வீதியுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் முற்பகல் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 50 பவுண் நகையும் 50 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப் போயுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் தேர்த்திருவிழாவான நேற்று முன்தினம் வீட்டில் இருந்தவர்கள் கோவிலுக்கு சென்றிருந்த போது மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மதங்களின் ஒரே குறிக்கோள்



ஒழுக்கம் உள்ளவராக இருங்கள். தைரியத்தை மனதில் நிலை நிறுத்துங்கள். இதயபூர்வமான அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கோழை பாவம் செய்கிறான். தைரியசாலி மனதால் கூட பாவம் செய்வதில்லை.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி. மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வதுதான்.

அனைத்து மத வழிபாட்டின் ஒட்டுமொத்த சாராம்சம் என்பது தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வது மட்டும்தான்.

பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே ஆன்மீகம்.

சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத்தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறுபாடில்லை.

நல்லொழுக்கம் ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்கிறது. தீயொழுக்கமோ கீழ் நிலைக்கு இழுத்துச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழாலை தெற்கு மயிலங்காடு ஞானகலா சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஞானகலா முன்பள்ளி விழாவும் அண்மையில் நடைபெற்ற போது முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவும் வினோத உடைப்போட்டியும் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## உதைபந்தாட்ட போட்டியில் வல்வை A, மனோகரா அணி வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றும் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஆதிசக்தி B அணி எதிர்த்து வல்வை A அணி மோதிக் கொண்டது. இதில் 4:3 என்ற கோல் கணக்கில் வல்வை A அணி வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் மனோகரா அணியை எதிர்த்து வல்வை B அணி மோதிக் கொண்டது. இதில் 4:2 என்ற கோல்கணக்கில் மனோகரா அணி வெற்றி பெற்றது. (3)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

இவ்வாண்டிற்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையில் நடைபெறும் போட்டி விபரங்கள் பின்வருமாறு,

**துடுப்பாட்டப் போட்டி**

நடைபெறும் இடம் : கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக் கல்லூரி) யாழ்ப்பாணம்.

இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி, நாளை ஞாயிற்றுக்கிழமை 8.00 மணி

பூந்தோட்டம் (ஆண்)

இடம்:- சென் ஜேன்ஸ் கல்லூரியில் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி, 23 ஆம் திகதி வியாழக்கிழமை

பூந்தோட்டம் (பெண்)

இடம்:- சென்.ஜேன்ஸ் கல்லூரியில், மகளிருக்கான பூப்பந்தாட்டப் போட்டி 21 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

**உதைபந்தாட்டம்**

புங்கன்குளம் சனசமூக நிலையம் (காசிப்பிள்ளை விளையாட்டரங்கு), அரியாலை

திகதிகள்:- 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை , 27 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 28 ஆம் திகதி புதன்கிழமை. மேற்படி போட்டிகளில் மாவட்டச் செயலக வீரர்களும் சகல பிரதேச செயலக வீரர்களும் பங்குபற்றுகின்றனர் என்பதனை அறியத்தருகின்றோம்.

## கற்கோவளம் உதயதாரகையின் உதைபந்தாட்டப்போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறும் ஆட்டத்தில் பி.ப. 3.30 மணிக்கு சிவானந்தா B அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. (3)

## விளையாட்டுச் செய்திகள்....

## விவேகானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த வி.வி.

ஆவரங்கால் விவேகானந்தா ச.ச. நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் விவேகானந்தா ச.ச. நிலைய தலைவர் க.நாகேந் திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக AAA உங்கள் நண்பன் கே. செவ்வேள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஆவரங்கால் மேற்கு கிராம உத்தியோகத்தர் செல்வி. ரி.சியாமளா, வலிகிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி ரி.சிவசுதன், கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.பத்மகுமார், ஆவரங்கால் கணனி கல்வி நிலைய இயக்குநர் எம்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நவக்கிரி கிராம உத்தியோகத்தர் இ.யோகராசா, ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கழ்க தலைவர் செல்வன் பொ. தார்மீகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)



தெல்லிப்பளை கிழக்கு கலைச் செல்வி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் கலைச்செல்வி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற போது. சிறார்களின் விளையாட்டு நிகழ்வினையும் பரிசில் வழங்குவதனையும் வினோத உடை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா அணிக்கெதிராக வயம்ப அணி வெற்றி



சிறிலங்கா பிரிமியர் லீக் தொடரின் நேற்றைய முதலாவது போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஊவா நெக்ஸ்ட் அணிக்கெதிரான இப்போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கண்டி பல்லேகல மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஊவா நெக்ஸ்ட் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வயம்ப யுனைட்டட் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டையிழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ச்சியாக விக்கெட்டுக்களையிழந்த அவ் அணி ஒரு கட்டத்தில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து 18 ஓட்டங்களையும் 6 விக்கெட்டுக்களையிழந்து 90 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக கம்ரன் அக்மல் 36 ஓட்டங்களையும் மிலிந்த சிரிவர்தன 28 ஓட்டங்களையும் கௌஷல்ய வீரரத்ன 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஊவாநெக்ஸ்ட் அணி சார்பாக ஜேக்கப் ஓரம் 4 ஓவர்களில் 6 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் டில்ஹார பெர்ணான்டோ, உமர்குல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பானுக்க ராஜபக்ஷ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

148 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய ஊவா நெக்ஸ்ட் அணி 18.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 127 ஓட்டங்களைப்பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சிறப்பான ஆரம்பத்தை பெற்றுக்கொண்ட போதிலும் மத்திய வரிசை வீரர்கள் மோசமாக ஆடி ஊவா அணி தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக டில்சான் முனவீர, ஜேக்கப் ஓரம் ஆகியோர் தலா 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக சத்துரங்க குமார மூன்று விக்கெட்டுக்களையும் இசுரு உதான, அகில தனஞ்சய ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கௌஷல்ய வீரரத்ன ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சத்துரங்க குமார தெரிவானார்.



## தமிழருக்கு அரசியல்...

சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

முதலாவதாக கொழும்பு முதல் கிராமங்கள் வரை அதிகாரப் பகிர்வு முழுமையாக அமுல் படுத்தப்பட வேண்டும். இதற்கு பாரிய நிதி ஒதுக்கப்படுதல் வேண்டும் அவ்வாறான நிலை ஒன்று ஏற்பட்டால் மட்டுமே முழுமையாக தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பம் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும்.

பல்லின சமூகம் வாழும் எமது நாட்டில் இனங்களுக்குமிடையிலும் சமூகங்களுக்குமிடையிலும் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பினால் மட்டுமே பெண்களது அபிவிருத்தியையும் பூரணமாக முன்னெடுக்கமுடியும்.

உலகில் எந்த நாட்டில் யுத்தம் நடந்தாலும் எந்தக்காலத்தில் நடந்தாலும் அதனால் கூடுதலாக பாதிக்கப்படுவோர் பெண்களே. எனவே தீர்மானம் எடுக்கும் அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

எனது கருத்தின்படி ஆகக் குறைந்தது தேர்தல்களில் முப்பது சதவீதமான பெண்களுக்காவது சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்றார்.

அமைச்சர் சுமேதா டி.ஜயசேன, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க, சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்ற லைபிரியாவைச் சேர்ந்த லெமா கோபி, டிஸ்னி நிறுவனத்தைச் சேர்ந்த அல்பியன் டிஸ்னி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் சுமித்திரா ரத்நாயக்க, தலைவி விசாகா தர்மதாச உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (ந-11)

## அரசுக்கு எதிரா...

வீழ்ச்சிவிவசாயிகளுக்கான நிவாரணம் இன்மை போன்ற காரணங்களால் நாடு வீழ்ச்சியான நிலைக்கு செல்கிறது.

இந்த மகிந்த அரசு ஆட்சியில் இருக்கும் வரையில் இந்த நிலைமை தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஆட்சியிலுள்ள அரசாங்கத்திடம் வேதன அதிகரிப்பு, நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில், அரசாங்கத்துக்கு எதிராக புரட்சி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ந-11)

## முதியவர்...

கட்டை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணபதி நகுலேஸ் (வயது 77) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக் கப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-11)

## ஜனாதிபதி தலைமை...

ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்க அமைச்சர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர். எனினும் இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள மக்களுடைய பிரச்சினை குறித்து எந்த விடயங்களும் பேசப்படவில்லை. பேசப்பட்ட ஒருசில விடயங்களும் மூடி மறைக்கப்பட்ட நிலையில் வீதிகளின் புனரமைப்புக் குறித்தும், மீள்குடியேற்றம் குறித்தும் பேசப்பட்டது.

ஆனால் மன்னாரில் உள்ள நீதிமன்ற விவகாரம் மற்றும் சன்னார் கிராமத்திலிருந்து மக்கள் துரத்தப்பட்ட விவகாரம் குறித்து எந்த விடயமும் பேசப்படவில்லை.

மேலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதியில் மக்களிற்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் எந்தவிடயமும் பேசப்படவில்லை.

இந்நிலையில் புனரமைக்கப்பட்ட வீதிகள் குறித்தும், மீள்குடியேற்றப்பட்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட ஒருசில இடங்கள் குறித்து மட்டும் பேசப்பட்டுக் கொண்டு கூட்டம் நிறைவடைந்தது. (ந-11)

## மன்மோகனை...

ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தற்போது இந்தியாவுடன் இருக்கும் இடைவெளியைக் குறைத்து அதன் ஆதரவைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக இந்த மாதப் பிற்பகுதியில் பசில் ராஜபக்ஷ தலைமையில் கோத்தபாய ராஜபக்ஷ, லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவை புதுடில்லிக்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டது.

அந்தப் பயணத்திட்டத்தை புதுடில்லி நிறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அடுத்த மாதம் ஐ.நா.பொதுச் சபையின் ஆண்டுக் கூட்டத் தொடரில் பங்கேற்கும் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச மகிந்த திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அடுத்த மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக அமைச்சர் ஒருவரே இந்தியாவின் சார்பில் உரையாற்றவுள்ளார்.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மன்மோகன் சிங்கை நியூயோர்க்கில் சந்திக்கும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதால் ஜனாதிபதி மகிந்த ஒக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவிடம் தான் விரைவில் புதுடில்லி வருவதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)


## காரைநகர் களபூமி

## திக்கரை முருகமூர்த்தி கோயில் பற்றிய அறிவித்தல்



12.08.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி ஆலய மணி மண்டபத்தில் கூடிய விசேட பொதுக் கூட்டத்தில் ஆலய ஸ்தாபகர் கனகசபை காசிநாதரின் சகோதரர் கனகசபை சிதம்பரப்பிள்ளையின் நேரடி வம்சா வளியில் உதித்த சிவா திருநாவுக்கரசு மகேசன் அவர்கள் இவ்வாலயத்தின் முன்னேற்றம் கருதி அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க அறங் காவலர் பொறுப்பினை ஏற்றுக்கொண் டார் என்பதனை அறியத்தரு கின்றோம்.

வே.நடராசா
திக்கரை முருகன்
அடியார்கள் சார்பாக

(சி-778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

**இலங்கையில் கொழும்பை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்கும் ஆசியாவின் மிகவும் பலமான நிறுவனத்திற்கு பிராந்திய ரீதியாக பலதரப்பட்ட வெற்றிடங்கள் உள்ளன.**

- A/L படித்த 20 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- முழு நேர மற்றும் பகுதிநேரமாகவும் சேவையாற்றக் கூடிய வாய்ப்பு.
- வேறு சேவையில் உள்ளவர்களும் நிபந்தனைகளுடன் சேவையாற்றக்கூடிய வாய்ப்பு.
- இன்னும் பல அரிய வாய்ப்புகள்.

உங்கள் சுயவிபரக் கோவையை (Bio-Data) தொலைபேசி இலக்கத்தினை தெளிவாகக் குறிப்பிட்டு கல்விச் சான்றிதழ்களின் பிரதியுடன் கீழ்வரும் முகவரிக்கு 27.08.2012-ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 780

வலம்புரி

இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-780)



**D.M.I CANADIAN FARM:** வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கான **Customer Service, Supervisor, Assistant Manager and Manager** ஆகிய துறைகளுக்கு புதியவர்கள் பயிற்சி அளித்து சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சியின்போது 8000-15000 பின் 35000/= மேல் நிரந்தர வேலைவாய்ப்பு உள்ளனர். தகைமை O/L, A/L ( இம்முறை A/L முடித்தவர்களுக்கு விஷேட சந்தர்ப்பம்)

குறிப்பு: ஆண்கள் மட்டும் அவசியம்

தொடர்புகள்:

0655689799 / 0772310564 / 0773001962

(232)


## விரிவுரைகள் ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் 19 ஞாயிறு காலை 8 மணிக்கு இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல். 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி, தொ.பே.772395895

## புத்தரின் புனித எலும்புகளை...

புனித இடமாக வழிபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, இந்தியா வந்திருந்தபோது புத்தரின் சமாதியில் உள்ள அவரது சிதைந்த எலும்புகளை எங்கள் நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த முடிபை ஏற்று புத்தரின் எலும்புகளை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிபு செய்துள்ளது.

மத்திய பண்பாட்டு துறை அமைச்சர் செல்ஜா, இலங்கைக்கு சென்று புத்தரின் எலும்புகளை ஒப்படைக்கிறார்.

நாளை இலங்கையில் ஆரம்பமாகவுள்ள கண்காட்சியில் புத்தரின் எலும்புகள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

இது குறித்து இந்திய மத்திய அரச அதிகாரி ஒருவர் கூறும்போது, அண்டை நாடுகளின் இது போன்ற கோரிக்கைகளை இந்தியா வெகு அரிதாகவே நிறைவேற்றுகிறது.

இலங்கையுடனான நமது உறவு எவ்வளவு நெருக்கமானது என்பதற்கு புத்தரின் எலும்புகளை நம் நாட்டு அமைச்சர் நேரில் சென்று வழங்குவது நல்ல உதாரணம் என்றார்.

புத்தரின் எலும்புகளை ஒப்படைப்பதற்கு இலங்கைத் தமிழர் இயங்கங்களின் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர் ஒருவர் புத்தரின் எலும்புகளை ஒப்படைக்க இலங்கைக்கு செல்வதை ம.தி.மு.க. தலைவர் வைகோவும் எதிர்த்துள்ளார். இதை தடை செய்ய வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-11)

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் இராசமலர்



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் அரசடி வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் இராசமலர் அவர்கள் 16.08.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, தெய்வானை தம்பதிகளின் மூத்த புதல்வியும், சுந்தரம், அன்னம்மா அவர்களின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற லீலாவதி மற்றும் ஜெகதீஸ்வரன் (மேற்பார்வையாளர்-யாழ்.மாநகரசபை), மனோகரன் (ஆசிரியர்-கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம்-வவுனியா), விக்னேஸ்வரன்(ஆசிரியர்), ஸ்ரீலக்ஷ்மி, ஜீவன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தீபா, மேரிசாந்தினி (ஆசிரியை-நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்-வவுனியா), தர்சினி, நிறஞ்சன்(Arts மதன்), நதியா ஆகியோரின் மாமியாரும்,

தனுஜா, ஜதுஷன், பிரவின், நிவித்திகா, ஜஷ்வினி, வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியும், அம்பிகாபதியின் (பல்கலைக்கழகம்-யாழ்ப்பாணம்) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18.08.2012 இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

அரசடி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(233)


# 4வது நளின் காட்சியறையின் ஆண்டு ஆரம்ப தினத்தை முன்னிட்டு...

**3rd Generation mother board** களை அறிமுகம் செய்த நாங்கள்

**Intel 71 Chipset mother board** கொண்ட கணனிகள்

மெகா அதிரடித்தள்ளுபடி 18.08.2012 இல் இருந்து 22.08.2012 வரை....

மிக குறைந்த விலையில்...

எம்மிடம் வாங்கும் கணனிகளுக்கு

**FREE Multi Dongle Huawei and Headphone**

(சி-779)

- Lap Tops i3,i5,i7
- Branded PC i3,i5
- Atom,Dual core Pc

| No | Process | M/Boad | Gen | H.D.D | Ram | DVD | Casing | Monit | UPS | Price |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Nit01 | Atom | Asus | 2nd | 160GB | 2GB | Samsung | ATX | 19" | 650w | 43800/= |
| Nit02 | Dualcore | intel 61 | 2nd | 500GB | 2GB | Samsung | ATX | 19" | 650w | 54800/= |
| Nit03 | i3 | intel 61 | 2nd | 500GB | 4GB | Samsung | ATX | 19" | 650w | 64500/= |
| Nit04 | i5 | intel 71 | 3rd | 500GB | 4GB | Samsung | ATX | 19" | 650w | 73000/= |
| Nit05 | i7 | intel 71 | 3rd | 500GB | 4GB | Samsung | ATX | 20" | 650w | 96000/= |

எமது நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த வாடிக்கையாளர்கள், அன்பர்கள், விநியோகஸ்தர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றிகள். மேலும் எமது நிறுவன வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

NALIN Information Technologies Pvt Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES**

195/2, Parameswara Junction, Jaffna.

web - www.nit.lk T.P: 0212221121 / 0212220838


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org